W. 38767
1986

துண்டுப் பத்திரிகை, எல்லோருக்கும் படிக்கக்

நே. 5. கொடுங்கள்.

# குழந்தைகளைப் பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்கவேண்டிய சுருக்க விஷயங்கள்.

---

இஃது
அடியாரிலும், குவாலியரிலும் உள்ள
"பெற்றோர் உபாத்யாயர்கட்சங்க"த்தால்
பிரசுரிக்கப்பெற்றது.

ஆங்கிலத்தினின்று மொழிபெயர்த்தவர்,
**T. A. கோபாலஸாமி நாயுடு, F. T. S.,**
மிராசுதார்
திருப்பணிவட்டாரம், சீகாழி தாலூ[illegible]
தஞ்சாவூர் ஜில்லா.

---

பேரளம் திருமீயச்சூர்
பிர்ம்ம வித்தியா அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.
1919.

[illegible] விலை] [அணா 3.

"குழந்தையென்றால் அது ஒரு ஜீவாத்மா, அதற்கொரு சரீரமுண்டு."

---

"தம்பொருளென்பதன் மக்களவர்பொரு
டந்தம் வினையால் வரும்."

திருக்குறள்.

குழந்தைகளைக் காப்பாற்றுவதையும், அவர்களைப் பழக்குவதையும் பற்றின சுருக்கமான விஷயங்கள்.

"இனிவரும் தலைமறைகளின் கதி நும்மைப்பொறுத்திருக்கின்றதென்றும், உம்மிடம் ஒப்புவிக்கப்பெற்றிருக்கும் இச்சீவர்களுக்கும், மனிதகோடிக்கும், கடவுளின் முன்னும் நீர் மானிடர் யாருமே தெரிந்துகொள்ளக்கூடிய மிகப்பெரும் உத்திரவாதத்தைப் பெற்றிருக்கின்றீர் என்றும், தெய்வத்தன்மை வாய்ந்த எல்லாவற்றின் பேரிலுமாணையால ஒருநாளும் மறவாதீர்."

MAZZINI. (மாஜினி.)

குழந்தைகளைப் பழக்கும் முறையில் ஜாக்கிரதை யாயிருக்கவேண்டிய

சில முக்கிய விஷயங்கள்.

இத்துண்டுப் பத்திரிகையில் அடங்கியுள்ளவையாவும் திறமையுள்ள இந்திய ராஜ்யாதிகாரி யொருவரால் எழுதப்பெற்று, இப்பொழுது கிடைத்தற்கு அரிதானதும், அச்சிலில்லாததுமான ஒரு பத்திரிகையினின்று எடுத்து வரையப்பெற்றுள்ள சில வாக்யங்களாம். மூல நூலின் பெயர், இந்திய குழந்தைகளைப் பழக்கும் முறையைப்பற்றின சுருக்கமான விஷயங்கள், என்றது. அப்பத்திரிகையைப் படிக்குங்கால் அந்த எழுதினவருடைய மனதின் பிரபாவத்திற்குரிய நுண்ணிய நியாய வாதங்களும் விஷயத்தின் விவரணங்களும் செவ்வனே விளங்கும். நானிதுவரையிலான அபிப்பிராயங்களுக்கிணங்க இரண்டொரு குறிப்புகள் மட்டுமே சேர்க்கப்பெற்றுள்ளன. மதராஸ், அடியார், பிரம்ம வித்யா விளம்பரக் கட்டிடத்தில் கிடைக்கக்கூடிய குழந்தைகளின் காப்பு என்ற தலைப்பெயருள்ள ஒரு இந்திய சீமாட்டியால் எழுதப்பெற்ற நூலும்; சிசு என்ற கலையுணர்ந்த ஸ்திரீயொருவரால் வெளியிடப்பெற்ற நூலும், (No. 19, People's Books); குழந்தையைப் பழக்கும் முறை என்ற (No. 98, People's Books) நூலும், எடுத்துக்கொண்ட இவ்விஷயத்தில் அதிகத் தெளிவைப் புகட்டும்.

குழந்தைகளை வளர்ப்பதின் முக்[...]க் கருத்துகளென்னெனில் :—

1. தேகத்திற்கு ஹானியைய, அல்லது உயிருக்கும் அவயவங்களுக்கும் ஆபத்தை யுண்டாக்கக்கூடிய சம்பவங்கள் நேரிடாவண்ணந் தடுத்தல்.

2. குழந்தை திடகாத்திரம் பெற்றிருக்கச்செய்தல்.

3. குழந்தையின் உன்னியுணரும் உன்னிப் பார்க்கும் சக்திகளை மெள்ளமெள்ள வளரச்செய்தல்.

4. சுற்றிலுமுள்ள வஸ்துக்களை அது அதிகமாய்த் தெரிந்துகொள்ளும்படிச் செய்தல்.

5. தாய், தந்தை, குருக்களின் சொற்படி நடக்க அதைத் தயாரித்தல்.

6. நற்பழக்கங்களையும் நன்னடை நற்சுபாவங்களையும் கற்பித்தல்.

7. சுருங்கச்சொல்லின், அதற்கு வயது வருங்காலத்தில் குழந்தை உலகவாழ்வுக்குத் தயாராயிருக்கும் வண்ணம் அதைத் தயாரித்தலும், உலகில் அமரிக்கையாயும், திறனாயும் அது வாழ்நாள் கழிக்கத் திடம்பெறச் செய்தலுமேயாம். *

---

* குறிப்பு:—"தம்மிற்றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னு[யி]ர்க்கெல்லா மினிது." திருக்குறள்.

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—

I. பிறருக்கு அவர்களால் தீங்கு நேரிடக்கூடிய காரியங்களில் தவிர மற்றக் காரியங்களில் குழந்தைகளைத் தடங்கல் செய்யாதேயுங்கள்.

II. சித்திரப் படங்களிலும், சங்கீதத்திலும், சிருஷ்டியின் அழகைப் பார்ப்பதிலும் அவர்களுக்கு உற்சாகமுண்டாக்குங்கள்.

ஆஹாரம்: — பூரணமாய் வளர்ந்த ஒரு மானவரை விட, ஒருகுழந்தையே அதிக சத்துள்ள ஆகாரத்திற்குப் பாத்திரமானதென்றது அநுபவத்தை யொட்டின வுண்மை. வெறும் அரிசி சாதம் மாத்திரம் போதாது; கேழ்வரகு, சோளம், கம்பு, கோதுமை முதலியவை போன்ற அதிக சத்துள்ள தான்யங்கள் (குழந்தைக்கு) அன்றாட உணவின் பாகமாயிருக்கவேண்டும். அதிக பணச்செலவுள்ள ஆகாரங்கள் தேவையில்லை. (மேற்சொன்ன தான்யங்கள் அதிகச் செலவுள்ளனவாய்க் கருதப்பட இடமில்லை) துவரம்பருப்பு, பால், ஆடைத்தயிர் (நெய்) இவைகளும் குழந்தைகளுக்குச் சேரவேண்டும்.

தேகப்பயிற்சி:—இது சம்பந்தமாய் சில நியாயங்கள் முக்கியமாயுள:—1. குழந்தைகளின் தேகசௌக்யத்திற்கு தேகப்பயிற்சி முக்கியமானது. 2. தானாகவே சந்தோஷத்தின்மேல் எவ்வளவு அது செய்யப்படுகிறதோ அவ்வளவும் மேலானது. 3. எவ்வளவுக்கு அதில் உற்சாகமுண்டாகிறதோ அவ்வளவுக்கு அது நலமானது. 4. எவ்வளவுக்கு அது இயற்கைச் சுபாவமாயமைகிறதோ அவ்வள

வுக்கது மேலானது. அதனால், சாதாரணக் கசரத்துகள் மாத்திரம் அவ்வளவு நல்லவையல்லவென்று ஏற்படுகிறது. தேகப்பயிற்சி வெட்டவெளியி லிருக்கவேண்டும், வீட்டுக்குள்புறத்தில் மாத்திரம் செய்தலென்றிருக்கக்கூடாது.

ஆகாயம் (காற்று) சுத்தமாயிருக்கவேண்டும். அதாவது வெட்டவெளியில் அல்லது கடற்கரையிலிருப்பதைப் போன்றிருக்கவேண்டும். தேகத்திற்குக் களையுண்டாகும் நிலைக்கு அதிகமாய்த் தேகப்பயிற்சி செய்யக்கூடாது. தேகப்பயிற்சி செய்தவுடனே குழந்தையை சாப்பிடவாவது ஸ்நானம்செய்யவாவது விடக்கூடாது.

பையன்களுக்கு எப்படி தேகப்பயிற்சி தேவையோ அப்படி பெண்களுக்கும் அது தேவை. இந்திய ஜன சமூகத்தில் இவ்விஷயம் சரியானபடி கவனிக்கப்படுவதில்லை. எந்தப் பெண்கள் சிறுவயதில் தேகப்பயிற்சி செய்து வந்திருக்கிறார்களோ அந்தப் பெண்கள் தேக பலம் உள்ளவர்களாயும் ஆரோக்யம் (சௌக்யம்) உள்ளவர்களாயுமிருப்பதுடன், சுகப்பிரசவமும் அடைகிறார்கள், இதற்கெதிராய், எந்தப் பெண்கள் சரீரப்பயிற்சி யில்லாதிருந்திருக்கிறார்களோ அந்தப் பெண்கள் இளைத்து நோஞ்சலாயிருப்பதுடன், பிரசவகாலத்தில் சிரமப்படுகிறார்கள், ஆபத்திற்கு முள்ளாகிறார்கள்.

குழந்தைகள் விளையாட்டுக் கார்யங்களைச் செய்வதாலேயே அவர்கள் தங்களைத் தேகப்பயிற்சிக்கு சகசத்திலுள்ளாக்கிக் கொள்கின்றார்கள். இயற்கையினமைப்பிலேயே, விளையாட்டென்பது அவர்களுடைய சௌக்யத்திற்கும்

வளர்ச்சிக்கும் ஏற்பட்ட ஒன்றுயுள்ளது. அவர்களி... ...பாட்டுகளைத் தடுப்பது மூடத்தனம்; அதற்குப் பதில... அவர்களை இஷ்டப்படி விளையாட விடுங்கள். பையன் களுக்கும் பெண்களுக்கும் தேகப்பயிற்சி கொடுக்கும் அநேக வெளிவிளையாட்டுகள் இந்தியருக்குண்டு. அவ் விளையாட்டுகளை கர்நாடகமென்றும், ரம்யமில்லாதனவென் றும் எண்ணி விட்டுவிடாதேயுங்கள். அவைகள் குழந்தை களுக்கு மிகப்பொருத்தமானவை; குழந்தைகளுக்கு மன உற்சாகத்தையும் தேகப்பயிற்சியையும் தருகின்றன. இவ் வளவு பெரிய ஜனமடர்ந்த தேசத்தில் இவைகளைவிட மேலான தேகப்பயிற்சி சாதனங்களைக் கண்டு பிடித்து அமைப்பது சுலபமாயிராது.

சுகம்:—உடுக்கும் உடை ஒருவாறு தொளதொளப் பாய் அவயவங்கள் முக்கியமாய்க் கால்களும் கைகளும் வீசிநடந்து ஓடித்திரிய இடந்தருவதா யிருக்கவேண் டும். உடையானது குழந்தையினுடைய பரபரத்த விளை யாட்டுகளுக்கு இடைஞ்சலா யிருக்கக்கூடாது. உடை யின் எந்தபாகமும், குழந்தையின் தேகத்தில் இரத்த ஓட் டத்தைத் தடுக்கக்கூடியதாய் அல்லது மார்புபக்கத்திலாக ட்டும், இருதுடைகளின் மத்தியிலாகட்டும் இறுகிப்பிடிப் புள்ளதா யிருக்கவே கூடாது. சரீரத்தில் தழும்பு உண் டாகுமாறு அவ்வளவு இறுகலாய் உடைகளை யமைக்கக் கூடாது. பையன்கள் பெண்களின் இடைகளில் இத்த கைய தழும்புகள் அடிக்கடி காணப்படுகின்றன. வேஷ்டி அல்லது பாவாடை மிக இறுகலாய்க் கட்டப்பெற்றுத் தழும்புண்டாகின்றது. ரவிக்கைகூட மிதமிஞ்சி இறுக

...தைக்கப்பெற்று, அதன் கார்யமாய் மார்பு அகை... திரும்பக் கூடாமற்போய் மார்பு குறுகிக் கோழிமா... பாவதுமின்றிச் சில வேளைகளில் சிக்குமுண்டாகிறது.

படுக்கை துணிகள்:—இவைகளும் மேற்கூறிய பொது விதிகளை யொட்டியிருக்கவேண்டும். பகற்காலத்தில் படுக்கைகள் சுருட்டப்பெற்றிராமல் விரிக்கப்பெற்றே இருக்க வேண்டும்; ஏனெனில், காற்று தாராளமாயோடுவதால் படுக்கையிலுள்ள எல்லா துர்நாற்றமும் அப்பொழுதுதான் நீங்கும். குழந்தைகள் தூங்கும்போது அவர்களின் முகத்தை மூடுவது பெருங்குற்றம்; ஏனெனில், உள்ளிருந்து நாசி வழியே வெளிவரும் மூச்சுக்காற்றை வெளிச்செல்லவொட்டாது அது தடுக்கிறது. ஒருதடவை வெளியிட்ட மூச்சுக்காற்றை மறுபடியும் மறுபடியும் உள்ளுக்கு மூச்சை யிழுத்தல் சுகாதாரத்திற்கு (தேக சௌக்யத்திற்கு) மிகக் கெடுதியானது.

தேகமும், மனமும்:—குழந்தைக்குத் தீவிரமாய்ப் பரீக்ஷைகள் தேறவேணுமென்று ஆசைகொண்ட ஒரு தகப்பன் குழந்தையின் மனோசக்தியின் அளவுக்கு அதிகமாய், மனம் பக்குவமாகாத ஆரம்பகாலத்திலேயே, மிதமிஞ்சின மனப்பயிற்சிகளை கொடுத்து நிர்ப்பந்திக்கிறான். இது ஒரு பெரும் குற்றமானதோடல்லாமல் ஒரு பெருத்த முட்டாள்தனமாய்க் கூடவிருக்கிறது; ஏனென்றால், அவ்விதம் செய்தலால் குழந்தையின் சரீரம் மிக துர்ப்பலமாய் இளைத்துப்போகிறது.

குழந்தையினிடம் தந்தையின் விசுவாசம்:—தந்தை குழந்தையினிடம் ஸதாகாலமும் மிக ஆவலுடன் கூடிய விசு

வாசத்தைப் பாராட்டவேண்டும். குழந்தைக்கு ...
சந்தோஷமுண்டாகிறதோ அததிலெல்லாம் தந்தை சந்
தோஷம் பாராட்டவேண்டும். அவ்விதம் செய்வதால்
அவர் குழந்தையின் சந்தோஷத்தை இரட்டிப்பு மடங்கு
அதிகப்படுத்துகிறார். குழந்தைக்கு சந்தோஷந்தருவது
எதுவாயினும் சரியே அதிலெல்லாம் தந்தை சம்பந்திக்க
வேண்டும். குழந்தை விளையாட்டுக் கருவிகளைத் தனக்
கிஷ்டமானபடி யாதாமொருவிதம் அமைத்து வைத்து,
தந்தையிடமோடித் தான்செய்து முடித்த பெரும் கார்
யத்தை வந்து பார்க்கும்படி கேழ்க்குமானால், தந்தை
யானவர் ஒருசொல் கூட மறுதளித்து சொல்லாமல் மகா
சந்தோஷத்துடன் போய் அதைப் பார்த்துத் தானும்
சந்தோஷிக்கவேண்டும். குழந்தையினிடம் அதற்குண்டா
கும் அற்பச் சங்கடங்களிலும் மனநோய்களிலும் தந்தை
அனுதாபம் உள்ளபடி யடைந்து அவ் வனுதாபத்தை
வெளிக்கும் காட்டவேண்டும். தந்தை வீட்டைவிட்டு
வெளியேபோனால் போதுமென்று குழந்தைகள் நினைக்
கும்படி அவ்வளவு தீயவழியில் சில தந்தையர் குழந்தை
களை நடத்துகிறார்கள். இது தவறான விஷயம். தான்
குழந்தைகளை நடத்தவேண்டிய முறைப்படி அவர் நடத்தி
னால், குழந்தைகள் அவர் வீட்டிலிருக்கும்போது சந்
தோஷமுள்ளவர்களா யிருப்பார்கள். சுருங்கச்சொல்லின்,
குழந்தைகளுக்குத் தந்தையினிடத்தில் அவர் தங்களுக்
குச் சந்தோஷ முண்டுபண்ணுகிறவரன்றி துக்கத்தை
யுண்டுபண்ணுகிறவ ரல்லரென்ற நிச்சயமிருக்கவேண்டும்.

தந்தையின் உதாரணம்:—குழந்தைகள் பெரியோர்க
ளைப் பார்த்து அவர்களைப்போல் தாங்களும் செய்ய ...

...க்க வாரம்பிக்கின்றனர் என்பதை ஞாபகத் ... வைக்கவேண்டும். தந்தையின் உதாரணம் (நடை அல்லது நடவடிக்கை) நல்லதாயின், அது குழந்தையின் மனதில் அவருடைய போதனைகளைவிட எவ்வளவோ அதிகமான நன்மையுடன் ஆணித்தரமாயமையும். தந்தையானவர் எப்பொழுது பார்த்தாலும் கோபித்துக் கொள்ளும் சுபாவமுடையவராயின், குழந்தை வெகு சீக்கிரத்தில் அவர் மாதிரியே நடக்க வாரம்பிக்கும். தந்தை மரியாதை தெரியாதவராயிருந்தால், குழந்தை வெகுசீக்கிரத்தில் அவ்விதமே தானுமிருக்கக் கற்றுக்கொள்ளும்; இது சகஜமானதால், குழந்தை அவர் முன்னிருக்கும் போது அவர் நடக்கவேண்டிய நடை (ஒழுக்கம்) எல்லாம், அக்குழந்தை வளர்ந்தபின்னர் அது எப்படி நடக்க (ஒழுக) வேண்டுமென்று தான் எண்ணுகிருரோ, அப்படியே தந்தை நடந்துகாட்ட வேண்டும். பொதுவாய்க் குடும்பத்திலுள்ள எல்லோருமே இந்தக் கருத்தையே கொண்டவர்களாயிருக்கவேண்டும். குழந்தையைக் கெட்ட சகவாசத்துடன் சேராதிருக்கச் செய்யவேண்டுமென்பது இதனுல் விளங்கும். ஆகாரம் எவ்வளவுக்கு நன்ருயிருக்கிறதோ அவ்வளவுக்கு அது சரீரத்தில் நன்ருய் சேரும். அறிவானது எவ்வளவுக்கு நல்லதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அது மனதில் நல்லதாயமையும் (சேரும்). இந்த முக்யமான, சரியானவையென்று தீர்மானிக்கப்பெற்ற உண்மைகளைத் தெரிந்து அதன்படி நடவுங்கள். இந்தியர்களுக்கு, ஆகாரத்தைக் குழந்தைக்கு ரம்மியமாம்படி சமைக்கிற விதமின்னதென்று நன்ருய்த் தெரிந்த விஷயம். ஆனல்

அவர்களுக்கு, அறிவைக் குழந்தைக்கு கற்பிக்கும்படி செய்யும் விதமின்னதென்று அவ்வளவு நன்றாய்த் தெரியாது. மேற்சொன்ன இரண்டாவது விஷயத்தைப்பற்றி சில அபிப்பிராயங்கள் பின் வருமாறு:—

ஒவ்வொரு குழந்தையும் தனக்கு எட்டக்கூடிய வஸ்துக்களைப்பற்றி இன்னவையென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவுடன் கூடிய மனநாட்டத்தைச் சகசமாய்ப் பெற்றிருக்கிறது. தன் காணங்களால் தன்னைச் சுற்றியிருக்கும் வஸ்துக்களைப்பார்த்து அவ்வஸ்துக்களை இன்னவையென்று தெரிந்துகொள்வதில் மிக குதூஹலமுள்ளதாயிருக்கிறது. தன்னைசுற்றிலுமுள்ள வஸ்துக்களை குழந்தை பார்க்கிறது, குழந்தையுணர்கின்றது, குழந்தை தொட்டு அசைக்கின்றது, குழந்தை நக்குகின்றது, முகர்கிறது, அவைகளையது காதால் கேழ்க்கின்றது. இந்தக்காரியம் சதா போய்க்கொண்டேயிருக்கிறது. குழந்தை ஒன்றன் பின் ஒன்றாய் வஸ்துக்களைத் தெரிந்துகொள்கிறது. இவ்வாறு குழந்தை யாதாமொரு குறித்த வஸ்துவைப்பற்றி தெரிந்துகொள்ளவேண்டியதைத் தெரிந்துகொண்டபின் அவ்வஸ்து அச்குழந்தைக்குப் பிடித்தமுள்ளதாயிருக்கிறதில்லை. மறுபடியும் இந்த வஸ்துவைக் குழந்தை கவனியாது. அதற்குப் புதிதாயுள்ள வேறு யாதாமொரு வஸ்துவைப்பற்றி அது தெரிந்துகொள்ள விரும்புகிறது.

இதனால் தெளிவாகிற விஷயம் யாதெனில், குழந்தையின் அறிவை விருத்திசெய்ய வேண்டியதற்காகத் தந்தை ஒன்றன்பின் னொன்றாய்ப் புதிய வஸ்துக்களைக் குழந்தை

யின் திருஷ்டிக்குக் கொண்டுவரவேண்டும். பழகின, பழய வஸ்துக்கள் விஷயத்தில்கூட, அவைகளைப் புதிய ரூபங்களாக்கிப் புதிய சம்பந்தங்களுள்ளனவாய்ச் செய்யின், அவைகள் குழந்தைக்குச் சந்தோஷந் தரும். உதாரணமாக, மூங்கில் கழியினிடத்தில் குழந்தைக்கு ஒருவித பற்றுதலும் இராது; என்றாலும் மூன்று கழிகளை ஒன்று சேர்த்து முக்காலியாக்கி அதன்மேல் விளையாட்டுக்கருவிகளடங்கிய பெட்டியை வைக்கும்படி செய்தால், அதைக் கண்டு குழந்தை பிரியப்பட்டு அதைப்போல் வேறு முக்காலி ரூபங்களைத்தானே செய்ய வாரம்பிக்கிறது. மற்றும், விளையாடும் கடுதாசுகளை குழந்தைகள் முன்னரே பார்த்திருக்கின்றமையால் அவைகளிடம் பற்றுதலுண்டாகிறதில்லை. ஆனல் அக்கடுதாசுகளைக்கொண்டு ஒரு வீடு மாதிரி அமைத்தால் குழந்தை அதைக்கண்டு களித்துத்தானும் கடுதாசு வீடுகள்கட்ட ஆரம்பிக்கிறது. மறுபடியும், தந்திக் கம்பியைப் பார்த்தால் பற்றுதலுள்ளதாயில்லை, ஆனல் அதே கம்பியை மரக்கட்டைகளில் அமைத்து அவைகளை சப்தமுண்டாக்கச் செய்யுங்கள்; அது உடனே ஓசை செய்கிறது, குழந்தை அதே கவனமாய்க் கேழ்க்கிறது; இவ்வித உதாரணங்களைக் கொள்ளையாய்ப் பெருக்கலாம்.

குழந்தையினிடம் சந்துஷ்ட்டி சுபாவமிருக்கும்படிச் செய்:—ஒவ்வொரு பிராயத்திலும் (வயதிலும்) சுகம் பெற்றிருக்கவேண்டியதற்கு, மநம் களிப்புற்றிருக்கவேண்டியது அவசியம்; ஆகையால் அம்மனக்களிப்பை அல்லது சந்துஷ்டியை குழந்தைப்பருவத்திலேயே விர்த்திசெய்யத் தவறவேண்டாம். குழந்தையைப்பார்க்கும் பொழுதெல்

லாம் நீங்கள் அதை பக்ஷத்துடன் பார்த்து புன்னகை காட்டுவதாலும், நீங்களும் மநச் சந்துஷ்டியைப் பெற்றிருப்பதாலுமே குழந்தைகளுக்கு ஷ் மநச்சந்துஷ்டியை யுண்டாக்கக்கூடும். குழந்தையினிடம் சந்தோஷமுகமாய்ப் பேசுங்கள்; கோபக்குறியை முற்றிலும் விட்டொழியுங்கள். குழந்தையைச் சந்துஷ்டியான மநத்துடனிருக்கும்படி செய்யுங்கள். அதற்கு எதெதில் களிப்பு அல்லது மநச் சந்துஷ்டி யுண்டாகிறதோ அததிலெல்லாம் கூடுமான வரையில் குறுக்கிடாதீர்கள். இவ்விதம் செய்யவேண்டியது இன்றியமையாத (முக்கியமான) தென்பதைச் செவ்வனே யுணர்ந்து அதின் நன்மையை அறிந்தால், இவையெல்லாம் சுலபமாகவேயிருக்கும்.

கட்டாயப்படுத்திப் பயமுறுத்துவதைவிட இனிய சொற்களால் வசப்படுத்துவதுதான் மேல்:—குழந்தையைப் பழக்கும் விஷயத்தில் ஆரம்பமுதல் முடிவுவரையில் தந்தை இந்தக்கருத்தைத் தீர்மானமாய்க் கொள்ளவேண்டும்.

பகுத்தறியும் சக்தியை யுண்டாக்குங்கள்:— எவ்வளவுக்கெவ்வளவு இது குழந்தைப்பருவத்தில் செய்யப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வயதுமுதிர்ந்த காலத்தில் அது நலத்தைத் தரும். குழந்தைக்கு விஷயங்களை, எளிதில் புலப்படும்படியான வழிகளில் எடுத்து விவரமாய்ச் சொல்வதில் அக்கரையாயிருங்கள். யாதாமொரு விஷயத்தைச் செய்யும்படி சொல்லும்பொழுதும், செய்யவேண்டாமென்று சொல்லும்பொழுதும், நீங்கள் அவ்விதம் சொல்வதற்குள்ள காரண மின்னதென்பதைக் குழந்தைக்குச் சொல்

னுங்கள். குழந்தை யாதாமொரு விஷயத்தைப்பற்றி விவரணம் கூறும் பொழுதாகட்டும், அல்லது பகுத்தறிவுபற்றி வாதிக்கும் பொழுதாகட்டும், நீங்கள் அவைகளைக் கவனமாய்க்கேட்டுக் குழந்தையை அவ்வழியில் உற்சாகப்படுத்துங்கள். குழந்தைகள் தங்களுக்குள் ஏதாவது விஷயத்தைக்குறித்து வாதங்கள் செய்யும்பொழுது, அதாவது நல்லது தீயது, நியாயம் அநியாயமென்று தர்க்கங்கள் பேசும்பொழுது அதைக் கவனமாய்க் கேளுங்கள், உற்சாகப்படுத்துங்கள், நீங்கள் ஒப்பம் வைப்பதிலுைம் அல்லது பேத அபிப்பிராயம் சொல்வதிலுைம் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். குழந்தைகளுக்குள் அபிப்பிராய பேதங்களுண்டாம்பொழுது, உங்களிடம் அவர்கள் நியாயத்தைச் சொல்லி உங்கள் மேலான தீர்மானத்தை யவர்கள் பெறுதற்கு அவர்களை யுற்சாகப்படுத்துங்கள். இக்காரியங்கள் தொந்தரையானவையென்று ஆலசியஞ் செய்யாதீர்கள், பின்வாங்காதீர்கள். குழந்தையினிடம் பகுத்தறிவை அபிவிர்த்திசெய்யவேண்டும் விஷயம் முக்கியமானதென்று நீங்கள் தெரிந்துகொள்வீர்களானுல், அதற்காகத் தீவிர முயற்சி யெடுப்பீர்களானுல், குழந்தையைப் பழக்குமிவ் விஷயத்தில் எத்தனையோ துறைகள் (வழிகள்) உள்ளனவென்று கண்டுகொள்வீர்கள்.

கேள்விகள் கேழ்க்க உற்சாகப்படுத்து, கேள்விகளுக்கு பதில்கூறு:—விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற இயற்கையான அவாவினுல் குழந்தை அடிக்கடி கேள்விகள் கேழ்க்கிறது. அவ்விதம் செய்தலுக்காகக் குழந்தையைக் கண்டிக்காதே; அல்லது பேசாமலிருக்கும்

படி சொல்லாதே. கேள்வி கேழ்ப்பதானது குழந்தைக்குத்தன் அறிவை விருத்தி செய்துகொள்வதில் அவா விருப்பதைக் காட்டுகிறபடியால், அது ஒரு நல்ல குறி. குழந்தையைப்பார்த்து "பேசாமலிரு" என்று சொல்லாதே; தடை செய்யாதே; அதற்குப்பதிலாய் அதன் கேள்விகளுக்கு அதற்குப் புரியும்படியான பதில்களை மிக இனிமையாய்ச்சொல். குழந்தை உன் மேசையினண்டையில் வந்து இன்னின்ன வஸ்துவான தென்னவென்று கேழ்க்கிறது. வாயால் நீ விவரணம் கூறுவதைவிட வஸ்துவையே அதற்கு எடுத்துக் காட்டல் நலம்; அதுதான் அதிகத் தெளிவைத்தரும்; நாம் சொல்லும் வெறும் ஓசை (சப்தம்) களான வார்த்தைகளால் தெரிந்துகொள்வதைவிட, தன்னுடைய சொந்த கரணங்களால் பார்த்துத் தெரிந்துகொள்வது தான் குழந்தைக்கு அதிக நன்மையும் ஆணித்தரமுமானது. ஆகையால் குழந்தை எதெதைத் தெரிந்துகொள்ள வேணுமென்று நீ விரும்புகின்றனையோ அதையெல்லாம் குழந்தைக்கு நீ கண்ணெதிரில் காட்ட வேண்டும்.

குழந்தை தன் வேலையைத்தானே செய்யவேண்டும்:—குழந்தையைத் தன்வேலையைத் தானே கூடுமானவரையில் பிறர் உதவியின்றி செய்யவிடவேண்டும். உதாரணமாக: குளிக்கும்பொழுது தானே ஜலத்தை எடுத்து ஊற்றிக் கொள்ளவேண்டும்; தன்னுடம்பைத்தானே தேய்த்துக் கொள்ளவேண்டும்; தானே ஈரத்தைத் துடைத்துக் கொள்ளவேண்டும்; தன் பாத்திரங்களைத்தானே சுத்தி

செய்துகொள்ளவேண்டும்; வஸ்திரத்தைத் தானே உடுத்துக்கொள்ளவேண்டும்; மயிரைத் தானே சீப்பால்சீவி முடியிடவேண்டும்; தன்கையால் சோறுஎடுத்து சாப்பிடவேண்டும்; விளையாட்டுக் கருவிகளைத் தானே பாதுகார்க்கவேண்டும்; ஓரிடத்திலிருந்து நாற்காலியை மற்றோரிடத்தில் வைக்கவேண்டுமானால், அது தானே செய்யவேண்டும். ஏதாவதொரு வஸ்துவைப் போயெடுத்துவரவேண்டுமானால், அதைத்தானே போயெடுத்துவரவேண்டும். விளையாட்டுச் சாமான்களைக் கொண்டுபோய் வைக்கவேண்டுமானால், அதைத்தானே செய்யவேண்டும். தன் குடையைத்தானே பிடிக்கவேண்டும். குழந்தைக்கு வேலைக்காரனைக்கொண்டு குடைபிடிக்கச் செய்வது கெட்ட பழக்கம். குழந்தைகள் தங்கள் தாய்தந்தையர் செய்யும்வேலையின் யாதாமொரு பாகத்தைத் தாமும் செய்யவேண்டுமென்று அடிக்கடிப் பிரியப்படுகிறார்கள்; இதற்குக் கூடுமானவரையில் அநுமதி கொடுப்பதால், குழந்தைக்கு நல்ல பழக்கம் (பயிற்சி) ஏற்படுகிறது; வேலையாள் உதவியில்லாமலே தனக்கு வேண்டியதைத் தானே செய்துகொள்ளும்படி குழந்தைகளைப் பழக்கவேண்டும்; ஏனெனில், அதன் பிற்காலத்தில் ஒரு வேலைக்காரனை வைத்துக் கொள்ளக்கூடிய நிலைமை அதற்குண்டாகாமலிருக்கலாம். இடுப்பில் குழந்தையைத் தூக்கிச்செல்வதென்ற இந்தியரின் பழக்கம் கெடுதல்; நடக்கமுடியாச் சிசுவாயும் அல்லது அது நடக்கமுடியாத அவ்வளவு தூரவழியாயுமிருந்தால் குழந்தையை எடுத்துச் செல்லலாம். பணக்காரர்க

ளுடைய குழந்தைகளைக்கூட தம் வேலையைத் தாங்களே செய்து முடிக்கும்படி பழக்கவேண்டும்; அவ்விதம் செய்தல் ஈனத்தனமென்றும், கௌரவமல்லவென்றும் நினைக்கக்கூடாது.

ஒரு கோரமான அநியாயமும், கொடுஞ்செயலும்:—ஒரு தந்தை குழந்தையை வெகு பலமாய் அடித்து அது கூக்குரலிட்டழும்பொழுது, அதை அழாதிருக்கும்படி நிர்ப்பந்தித்தல் எவ்வளவு பிசகான கார்யம்! அழுகிறதை நிறுத்த முடியாதிருக்கிற குழந்தை அழுதுகொண்டேயிருக்கிறது; தந்தை அதை அடங்காத் தனமென்றுத் தவறுதலாயெண்ணி, கோபம் அதிகரித்து, மறுபடியும் அடிக்கிறான். அனேக வீடுகளில இவ்வாறு நடக்கிறதைப்பார்க்க விசனிக்க வேண்டியிருக்கிறது. தந்தையின் கண்ணுக்குத் தெரியாத யாதோவொரு உடம்பினுட்பிணி அல்லது வலியால் குழந்தைக் கற்றிக்கொண்டேயிருக்கிறது. அது கெட்ட சுபாவத்தால் அல்லது வேணுமென்று ஹடத்துக்காகச் செய்வதாய்த் தவறுதலாய்த் தந்தையெண்ணி குழந்தை வாய்மூடி ஸ்தம்பித்து சும்மாயிருக்கும் வரையில் அடிக்கிறான். கையில் வைத்துக்கொண்டிருக்கும் சாமானொன்றைத் தன் காலில் போட்டுக்கொண்டு குழந்தை வலியால் அழும்பொழுது, தந்தை அதைக்கண்டு அநுதாபங்கொண்டு ஆறுதல் சொல்லுவதற்குப் பதிலாய், அடங்காக் கோபத்துடன் சரேலென்று பாய்ந்து அதன் முட்டாள்த் தனத்திற்காகக் குழந்தையை அடிக்கிறான். தாயுங்கூட தன் பெண் ஏதாவதொரு பலகாரம் செய்ய எத்தனித்துத் தன் கைவிரலைச் சுட்டுக்கொண்டால்,

அதைப்பார்த்து அடிக்கிருள். எத்தனையோ இடங்களில், குழந்தைகளை அவர்களின் பக்குவப்படாத மூளைக்கு கிரகிக்க சாத்தியமில்லாத ஏதாவதொரு நுட்ப விஷயத்தை அவர்கள் கற்றுக்கொள்ளவேணுமென்று தந்தைகள் நிர்ப்பந்தித்து அடித்துப் புகட்டுங்காலையில், குழந்தைகள் பாடம் பண்ணமுடியாது தவிக்கிறதைக்கண்டு, தந்தைமார்கள் குற்றமற்ற பேதைச் சிறுவர்களை உபத்திரவிக்கிருர்கள். இவையும் இவைபோன்ற மற்றவையும் செய்யாது விட்டொழிக்கப்படவேண்டும்.

சுசியும், சுகாதாரமும்;—பெற்ருேர்கள் வீட்டில் நடந்து காட்டும் தம் அநுஷ்டானத்தால், இவை குழந்தைக்கு மிகு நன்ருய்ப் போதனையாகின்றன. குழந்தை வாசஞ்செய்யும் வீடானது சுத்தமாயும் சுகாதாரத்திற்கடுத்ததுமிருக்குமானுல், குழந்தை அப்பழக்கத்தை யுடையதாய், அசுசியின்கண் வெறுப்பைப்பெறும். அசுசி, அனுசாரங்களும், துர்நாற்றங்களும் தேகத்திற்கு சிக்கை யுண்டு பண்ணி மரணத்தையு முண்டாக்குகிற தென்றதை அடிக்கடி குழந்தைக்குச் சொல்லவேண்டும். அயலில் அவை நேருங்காலத்தில் அது சம்பந்தமான இரண்டு உதாரணங்களைக் காட்டுங்கள். அசுத்தமான தண்ணீர் அனேக வியாதிகளை யுண்டாக்குகிறதென்று குழந்தைக்குச் சொல்லுங்கள். சுத்தமான தண்ணீர் எது, அசுத்தமான தண்ணீர் எது; சுத்தமுள்ள ஆகாயம் (காற்று) எது, அசுத்தமுள்ள ஆகாயமெது என்று குழந்தைக்குத் தெளிவாய் எடுத்துச் சொல்லுங்கள். சௌக்கியமாயிருக்கவேண்டியதற்கு சுத்தமான தண்ணீரும், சுத்தமான காற்றும் அத்

தியாவசியமானவை யென்று குழந்தைக்கு உறுதியுண்டாகும் விதம் சொல்லுங்கள். இளமையில் இந்த விஷயங்களில் நம்பிக்கையுண்டாவதால், பின்னால் வயது வளர்ந்தகாலத்தில் குழந்தைக்கு மிகப் பிரயோசனங்களுண்டாம்.

கண்ணால் பார்த்துக்கொண்டு கையாலும் விரல்களாலும் வேலை செய்தல்:—அநேக வியாபாரங்களும் கைத்தொழில்களும் மேற்கண்டவற்றைப் பொருத்து நடக்கின்றன. ஆகையால் மேற்கண்ட அவயவங்களுக்கு வேலை கொடுக்கின்றதும், அவயங்களுக்கு சுருசுருப்பையும் நயத்தையும் தருகின்றதுமான, ஏதாவது குழந்தைக்கு விருப்பமுள்ள வேலையை அது செய்யும்படி விடுங்கள். உதாரணமாய்: கோலிகுண்டு விளையாடுதல், பேனா அல்லது பென்ஸில் சீவுதல், களிமண்ணாலோ அல்லது அரக்கினாலோ உருவங்களமைத்தல், ஊசியால் பின்னல் வேலை செய்தல், கத்தரிக்கோலால் உருவங்கள் கத்தரித்தல், உருவமெழுதல், நூல்போடுதல், கோடு போடுதல், எழுதல்; பழங்களையாவது காய்கறிகளையாவது கத்தியால் அரிதல், பல வர்ண மாவுகளால் உருவங்களமைத்தல், கெட்டி பொம்மைகள் செய்தல்; இந்தியரின் வழக்கப்படி விரல்களுக்கு நயத்தைக்கொடுக்கும் விதமாய் மாலைகள் கட்டுதல், முதலிய வழிகளில் குழந்தைகளை கைவேலை செய்யவிடுங்கள்.

தேகமும், மநமும்:—பின்கண்டவை உண்மையென செவ்வனே தீர்மானிக்கப்பெற்றவை. தேகமும் மநமும் பிரிவினையின்றிச் சேர்ந்திருப்பனவாய், ஒன்று மற்ற

தைப்போன்றே, அவை முக்கியமானவை. ஆகையால், அவைகள் ஒன்றினிடத்துப்போன்றே மற்றொன்றினிடத்தும், நாம் கவனம் செலுத்தவேண்டும். ஒன்றைப்போன்றே மற்றொன்றையும் அவைகளை நாம் வளர்க்கவேண்டும். நீங்கள் தேகத்தை மாத்திரம் அதிக சிரத்தையோடு வளர்த்துவரின், மநமானது (வளர்ச்சியின்றி) வாடும். அதேவிதம், மநதை மாத்திரம் நீங்கள் அதிக சிரத்தையோடு வளர்த்தால், தேகமானது வாடும். பின் சொன்ன விஷயம், இந்தியர்களிடத்தில் விசேஷித்துள்ள தன்மையாயிருக்கிறது. திடமுள்ள தேகமும், திடமுள்ளமநமும் பெற்றிருக்கவேண்டுமென்பதே முக்கிய கருத்தாயிருக்கவேண்டும். இவ்விரண்டு விஷயங்களில், முன்னது (தேகம்) முன்முதல் நம் கவனத்தைப் பெறுவதாயிருக்கவேண்டும். சாதாரண புத்தியுடன் கூடிய ஒரு திட சரீரமானது, மிகுந்த புத்தியுடன் கூடிய ஒரு இளைத்த சரீரத்தைவிட அதிக போக போக்யங்களைத் தருகிறது. மநமானது தேகத்தைப்போன்றே தனக்கியற்கையான ஒருவித அளவுள்ள வளர்ச்சியையுடையது. தந்தையின் கருத்தெல்லாம் (மேற்சொன்ன) இயற்கையான வளர்ச்சிக்குத் தான் உதவியாயிருத்தலேயென்றிருக்கவேண்டும்; நிர்ப்பந்தத்தாலோ அல்லது சரியான அளவு கடந்தோ வளரச்செய்தலென்றேயிருக்கக்கூடாது. குழந்தை புஸ்தகம் படிப்பதில் மிதமீறிப் படிக்கும் சுபாவமுள்ளதானால், அவ்வழியில் அதைச் செல்லவிடாமல் நீங்கள் தடுக்கவேண்டும். ஒரு பையன் தன் 13-வது வயதில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் சகஜமாய்த் தேறக்கூடுமானால், அவனை 11-வது வயதில் அப்பரீக்ஷையில்

தேறிவிடவேணுமென்று வற்புறுத்தாதேயுங்கள். ஞாபகத்தில் வைக்கவேண்டிய பொதுவான விஷயம் யாதெனில்;—"குழந்தையின் மூளைக்கு, அதன் தேகம் இளைக்கும் விதமாய் அதிக வேலை கொடாதேயுங்கள்" என்பதே.

தசையா. அல்லது மநமா?—இவைகளில் எது குழந்தையினிடத்தில் அதிக கவனமாய் வளர்க்கப்பெறவேண்டும்? தந்தை இதைத் தீர்மானிக்கும் விஷயத்தில், எது குழந்தையின் பிற்கால வாழ்க்கையி லதிகமா யனுகூலமுள்ளதா யிருக்கு மென்றதைத் தீர்மானிக்கவேண்டும். உதாரணமாய், கொல்லன் விஷயத்தில் தசையானது அதிகப் பிரயோசனமுள்ளது; தட்டான் விஷயத்தில், மநம் அதிகப் பிரயோசனமானது. உழுது சாகுபடி செய்கிற கிருஷிகனுக்கு, ஒரு குமாஸ்தா வேலை செய்கிறவனுக்கிருக்கவேண்டியதைவிட அதிக தசைப்பற்றிருக்கவேண்டும். மூட்டை தூக்குகிறவனுக்கிருக்கவேண்டியதைவிட குறைச்சலான தசைப்பற்று பண்டிதனுக்குப் போதியது. வித்வானைவிட அதிக தசைப்பற்று போர் வீரர்களுக்கு வேண்டும். பொதுவாய் எல்லா நாடுகளிலும், முக்கியமாய் இந்தியாவில், மநதைப்பற்றின பிரயாசையைவிட, தசை நார்பற்றிய பிரயாசைதான் அதிகத் தேவையானதென்று ஞாபகத்தில் வைக்கவேண்டும். மநப்பிரயாசையைவிட தேகப்பிரயாசைதான் அதிக நிச்சயமுள்ள ஜீவனோபாயமாயிருக்கிறது.

மருந்துகள்:—குழந்தையின் க்ஷேமத்தில் அவர்களுக்குள்ள அவாப்பெருக்கால், இந்தியப் பெ[illegible]ோர்கள் குழ

ந்தைகளுக்கு மருந்துகளைப் போட்டுவித்தலிலே யதிகப் பிரியமுள்ளவர்களாயிருக்கின்றனர். ஆவசியகமானபோது தான் மருந்து கொடுக்கவேண்டும். எப்படி மிருகங்களின் சிறுவனவானவை எவ்வித மருந்தும் கொஞ்சமுமின்றி வளர்கின்றனவோ, அப்படியே சகஜமாய்க் குழந்தைகளுக்கு மருந்து தேவையில்லை.† மருந்து சாப்பிட குழந்தைகள் மறுதளிக்குமானால், இந்தியப் பெற்றோர்கள் பன்முறை அவர்களை மிருகத்தன்மையான வழிகளில் கட்டாயப்படுத்துகிறார்கள். இது பிசகு. இதில் பலவிடங்களிற் சொல்லியிருக்குமாறு, குழந்தைகள் (தனக்குத்தானாய் பெற்றோர்களிடத்து அன்பு, விசுவாசம், நம்பிக்கைகள் உண்டானமையால்) பெற்றோர்களிடத்தில் கௌரவம் பாராட்டும் விதமாய் அப்பெற்றோர்கள் குழந்தைகளை நடத்துகிறவர்களாயின், தந்தை வாய் திறந்து மூடுவதற்குள் குழந்தைகள் சாந்தமாய் மருந்தையுட் கொண்டுவிடும். * * * * * * *

குழந்தைகளுக்கு அடிக்கடி கண்வலியுண்டாகிறது. ஏதாவது ஆஸ்பத்ரி மருந்தைக்கொண்டு (அல்லது ஆயுர்வேதமெனும், நமது சென்னை நகரிலுள்ள பண்டிதசிகாமணி கோபாலாசார்லுகாரு போன்றவர்களால் செய்யப்பெறும், இந்திய சிகிச்சையைக்கொண்டு) வெகு சுலப்மாய்க் கண்வலியைப் போக்கிக்கொள்ளலாம். சரியான சிகிச்சை செய்வதற்குப் பதிலாய்ப் பெற்றோர், நாட்டுவைத்யர்களென்ற, வைத்யமுறையறிந்தவர்போல் நடிக்கும் முட்டாள் வேஷதாரிகளைக்கொண்டு சிகிச்சை செய்விக்கிறார்கள். சிலவேளைகளில் இதன் பலனாய் அருங்குழந்தை

---

† குறிப்பு:—"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
[illegible]ற்றது போற்றியுணின்." திருக்குறள்.

களின் கண்கள் அடியோடு குருடாய்விடுகின்றன. கருவி காரணங்களில், நேத்ரமானது மற்றெல்லாவற்றினும் அதிக முக்யமானதென்றும், அலக்ஷியத்திற் கிடமானதன்றென்றும் பெற்றோர் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

[N. B.:-குறிப்பு:—வைசூரியைப்பற்றி மூலத்தில் நூலாசிரியர் எழுதியுளர். அதை வரவொட்டாமற் றடுக்கவேண்டி, அம்மை குத்துவித்தல் முக்யமென்று அவர் கூறினர். இது 19-வது நூற்றாண்டின் மத்தியகாலம் வரையில் ஆக்ஷேபத்திற் கிடமில்லாதிருந்த கொள்கையாயிருக்கலாம். அந்நூற்றாண்டின் பிற்காலத்திலும் நிகழும் 20-வது நூற்றாண்டிலும் இக்கொள்கை முற்றிலும் தவறென்று ரூபிக்கப்படுகிறது. அம்மை குத்துவதால் மிருகங்களின் அம்மைப்பால்கள் நம் சரீரசம்பந்தம் பெற்று நமக்கியற்கையான உத்தமத்தன்மைகளை மக்னப்படுத்துவதுமின்றி, அதாவது மிருகத்தன்மையாக்குவதுமின்றி, நம் தேகத்திற்கும் அப்பால் விஷமுள்ளதாயிருக்கிறதென்றும், வெகு புத்திமான்களான டாக்டர்களால் இங்கிலாந்தில் வாதிக்கப்படுகிறது. வைசூரி வரவொட்டாமற் றடுக்கிறதற்கு, தினந்தோறும் தெளிவான மாசற்ற நீரில் ஸ்நானமும்; உடை ஆகாரங்கள் வெகு சுத்தமுள்ளனவாயும், அழுகின தல்லாதனவாயுமாக விருத்தலும்; சுத்தமுள்ள பானமும்; வீடுகளில் அசுத்தங்கள் தங்காவண்ணம் உள்ளும் வீடுகளின் வெளிப்புறமும் அன்றாடம் செவ்வனே சுத்தம் செய்தலும்; ஆகாயம் (காற்று) பரிசுத்தமாக யிருக்கச்செய்து சுத்தமுள்ள காற்றை சுவாசித்தலும்; இத்தகைய இயற்கைச் சாதனங்கள்தான் இன்றியமையாதனவென்று அறிஞர் துணிபு. ஆகையால் அம்மை குத்துவிக்கும் முறை நன்றல்லவென்றும், முற்றிலும் அறிவில்லாத் தீயப்பழக்கமென்றும் பெற்றோர் கண்டு கொள்வாராக! நிற்க; நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் விஷயத்தில், இந்தியருக்கு அவர்களுடைய வேதமுறையதான ஆயுர்வேத முறையே உத்தமமானது. மேனாட்டு வைத்யமுறையை

விட ஆயுர்வேத முறையே அதிகமாய் நோய்களுக்குக் கோட
லியாய் அமருகின்றன. இவ்வாயுர்வேதியர் ஒருவர் பண்டித
D. கோபாலாசார்லுகாரு, ஆயுர்வேத கலாசாலைத் தலைவர்,
சென்னைநகர், என்ற விலாசத்துடன் இந்தியா முழுதும் புகழ்
பெற்றோங்கி வளர்கின்றனர். அத்தகையார் நமது ஹிந்து வைத்
திய சாஸ்திரத்தை வடமொழியில் செவ்வனே கற்று, மூலிகை
கள் சேகரித்துச் செய்துவரும் வைத்யமுறையின் அனுபவமுள்ள
எவரும், மேனாட்டு வைத்தியத்தைத் தேடார். அனேகர் பண்
டிதர் என்று பெயர் வைத்துக்கொண்டு, பச்சைவெட்டுகளான
மருந்துகள் செய்து, சாஸ்திரத்தின் கருத்துத் தெரியாமல், பாட்
டுகளுக்குத் தங்களுக்குப்பட்ட அருத்தங்களைக்கொண்டு, ஜனங்
களுக்கு ஆபத்தை விளைவிக்கும் விதமாய் வைத்யம் செய்ய
வாரம்பித்துவிடுகிறார்கள். இவர்கள்தான் நாட்டு வைத்யர்கள்.
இத்தகையோரால்தான் இந்திய வைத்திய முறைக்குக் கெடுத
லான பெயர் உண்டாயிற்று. ஆகையால் இத்தகையோரை
விட்டு, தேர்ச்சியுள்ள ஆயுர்வேத, யுனானி வைத்ய முறைகளைப்
பழகும் உண்மையான பண்டிதர்களை இந்தியர் ஆதரித்து, சிகி
ச்சை செய்துகொள்ளலே இந்தியரின் கடமை. ஏனெனில்,
மேனாட்டு முறைகளைவிட, ஆயுர்வேத யுனானிமுறைகளே அதிக
குறைந்த செலவில் மருந்து முடிவதால்; மேனாட்டு மருந்துக
ளைவிட, ஆயுர்வேத யுனானிமருந்துகள் வெகு குறைந்த விலைக்
குக் கிடைக்கின்றதோடு மாத்ரமல்லாமல்; இந்திய சீதோஷ்
ணத்தில் பிறந்து வளர்ந்த எல்லாமதம், ஜாதிகளுக்கும் சம்பந்
தமான இந்தியர்களுக்கு தேகத்திலுள்ள நோய்களை மேனாட்டு
மருந்துகளைவிட இந்திய மருந்துகளான ஆயுர்வேத யுனானி
மருந்துகளே துரிதமாயும், வேருடன் அறும்படியும், கண்டிக்
கின்றன. இஃது, விவேகம் அநுபவமுள்ள எல்லோராலும்
ஒப்புக்கொள்ளப்பெற்ற விஷயம். T. A. G. Tr.]

குழந்தைகளின் நல்ல, தீய குணங்கள்:—குழந்தைகளிடம் உற்சாகப்படுத்தப் பெறவேண்டிய நற்குணங்கள் யாவை? குழந்தைகளிடம் தடுக்கப்படவேண்டிய தீயகுணங்கள் யாவை? விடை சாமான்யமானதே. பொதுவாய் மனிதர்கள் எந்த குணங்களை உலகத்தில் நன்றெனக் கொள்கின்றனரோ, அந்த குணங்கள் நன்றாம். பொதுவாய் மனிதர்கள் எந்த குணங்களை உலகில் தீதெனத் தவிர்க்கின்றனரோ, அந்த குணங்கள் தீதாம். முதலில், பெற்றோர், சகோதர சகோதரிகள், குடும்பத்திலுள்ள மற்ற சுற்றத்தார், மற்றும் வேலைக்காரர்கள் ஆனவர்களின் நல்லபிப்பிராயத்தையும், பற்றுதலையும், பிரியத்தையும் விளைவித்துக்கொள்ளும் முறையைக் குழந்தைக்குத் தந்தை சொல்லிக்கொடுக்கவேண்டும்; பின்னர், அக்கம்பக்கத்தினர், அதன்பின்னர் பொதுவாய் (எல்லா) ஜனங்களின் (நல்லபிப்பிராயம், பற்று, பிரியங்களை விளைவித்துக்கொள்வதில் சொல்லிக்கொடுக்கவேண்டும்.) உண்மையே பேசுதல், யோக்யமாகவே நடத்தல் எனும் முக்கியமான நற்குணங்கள் குழந்தையினிடம் விளைவிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். நல்லொழுக்கங்கள் முக்கியமென்பதைக் கவனியாது விடக்கூடாது.

வேலைக்காரர்கள்:—குடும்பத்தில் கீழ்ப்பட்ட வேலைக்காரர்கள் குழந்தைகளுக்கு கெட்ட விஷயங்களைச் சொல்லிக்கொடுக்காவண்ணமும் கெட்டப் பழக்கங்களையுண்டாக்காவண்ணமும் எப்பொழுதும் ஜாக்கிரதைப் பெற்றிருக்கவேண்டும். மிகப்பெரிய குடும்பங்களிலுள்ள குழந்

தைகளுக்கு வேலைக்காரர்களால் நேர்ந்திருக்கும் அளவி டக்கூடாத கெட்ட சம்பவங்களை நான் அறிவேன்.

படிப்படியாய்.

நடப்பதிலாவது அல்லது உயர ஏறுவதிலாவது குழந் தையானது படிப்படியாகத்தானே செல்லவேண்டுமெ ன்று ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டிருப்பினும், அறி வுசம்பந்தமான விஷயத்தில்கூட படிப்படியாகத்தானே குழந்தை மேற்செல்லவேண்டியிருக்கிறதென்றது எல்லோ ருக்கும் அவ்வளவு நன்றாய்த் தெரிந்த விஷயமாயில்லை. இக்கருத்தை மநதிலிருத்திக்கொண்டு, அதன்படி குழந் தையை நடத்துங்கள். மண்பாண்டங்களைச் செய்யக் குழந்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென நீவிர் விரும் புகிறீர் என்று வைத்துக்கொள்வோம். முன்னர் சேக ரித்துள்ளக் களிமண்ணைக் காட்டுமின்; பின்னர், அது எவ் விதம் ஜலத்துடன் பிசைக்கப்பெற்று உருண்டைகளாகப் பிடிக்கப்பெறுகிறதென்று காட்டுமின். பின்னர், எப் படி ஒவ்வொரு உருண்டையும் குயவன் சக்கிரத்தில் வைக்கப்பெற்று ச்க்கிரம் சுழன்றுகொண்டிருக்கும்போது, கையால் உருவமைக்கப்பெறுகின்றதென்று காட்டுமின். பின்னர், எப்படி செய்து முடிக்கப்பெற்ற பாத்ரம் சக் கிரத்தினின்று எடுக்கப்பெற்று, அதன்பின் அது வெயி லில் வைக்கப்பெற்று உலர்ந்து உறுதியாகிறதென்றும் காட்டுமின். பின்னர், அது எவ்விதம் சூளையில் வேக வைக்கப்பெறுகிறதென்றும் காட்டுமின். இவ்விதம் படிப் படியாய்க் காட்டுவதால், குழந்தையானது பூராவிஷயத்

தையும் சுலபமாயும் எதையும் விடாமலும் கற்றுத் தெரிந்துகொள்கிறது.

வஸ்திரம் செய்யப்படும் விதம் குழந்தை தெரிந்துகொள்ளவேணுமென்று நீவிர் விரும்புவீராஞல், மேற்சொன்ன வழியே பின்பற்றப்படவேண்டும். ஒரு பருத்திச் செடியினருகில் குழந்தையைக் கொண்டுபோய் ஒடுகளிலிருந்து பருத்தியை எடுமின், பின்னர் பருத்தியினின்று விதையை யகற்றும் விதத்தைக் காட்டுமின், சுத்தமான பருத்தியால் எவ்விதம் நூல்நூற்கப் பெறுகிறதென்று காட்டுமின். பின்னர், எவ்விதம் நூல்கள் ஒருவழியாய் அமைக்கப்பெறுகின்றனவென்று காட்டுமின். பின்னர், மற்ற மற்றதோர் விதங்களாய் வஸ்திரம் என்றரூபம் உண்டாம் வரையில் எவ்விதம் நூல்கள் அமைக்கப்பெறுகின்றனவென்று காட்டுமின். எடுத்துக்கொண்டவிஷயத்திற்கு இவ்வுதாரணங்கள் போதுமானவை. படிப்படியாகத்தானே நடப்பிக்கவேண்டும் என்ற நியாயம், போதனு விஷயத்தின் எல்லா தாகதிகளுக்கும் ஒக்கும். நில அளவு சாஸ்திரம் 47-வது கணிதத்தை, அதனை ஸ்தாபிக்கும், அதற்குமுன் கற்கவேண்டிய கணிதங்களைச் சொல்லிக்கொடாமல், நீவிர் போதனைசெய்ய வாரம்பித்தால், நிச்சயமாகவே தவறுதலடைவீர். எப்பொழுதும் படிப்படியாகத்தானே செல்மின், குழந்தை அடுத்தபடிக்குச் செல்லுமுன் முதற்படியைத் தீர தெரிந்துகொண்டிருக்கிறதாவென்ற நிச்சயத்தைக் காண்மின்.

கதை சொல்லல்:—தந்தை தாய் எப்பொழுதாவது, குழந்தைகள் திருப்திகரமாய் நடந்ததற்குப் பரிசாக

யாதாமொரு நல்லகதை சொல்லக்கூடுமல்லவா, அது போன்ற சிறு கதைகள் கேட்பதில் குழந்தைகளுக்கு மிகப்பிரியம். சந்தோஷத்துக்காக மாத்திரமல்லாது நல் விஷயங்களும் போதனையாம் விதம் கதை சிருஷ்டிக்கப் பெறவேண்டும். குழந்தைக்குச் சொல்லும்கதை சின்ன தாயும் எளிய நடையிலும் இருக்கவேண்டும். கதையா னது குழந்தைகளுக்கான விஷயங்களைப்பற்றியே யிருக் கவேண்டும், வயதானவர்களுக்கான விஷயமாயிருக்க வொண்ணாது. சிறுவர்களுக்கு அது கவர்ச்சியைத் தரு கிறதாயிருப்பதோடு, சகஜவிஷயங்களைப் பற்றினதாயும், சம்பாவிதமுள்ளதாயுமிருக்கவேண்டும். உண்மையில் நட ந்த சம்பவத்தைப்பற்றின சரித்திரமாகவே காணப்பட வேண்டுமேயல்லது, சிருஷ்டிக்கப் பெற்ற கதையாகக் காணப்படக்கூடாது. இந்தியர் சொல்லும் கதைகள் சரியானவையல்ல. ஏனெனில், அவைகளில் அசாதார ணங்களும் பொய்களுமானவை யடங்கியுள. பிசாசு கள், தைவிக சம்பவங்கள், இவைபோன்ற, ஒருவரும் கண்ணால் பார்க்கக்கூடாத விஷயங்கள் குழந்தைகளுக் கான கதைகளினின்று விலக்கப்படவேண்டும். உலகி லுள்ள சிருஷ்டிப் பொருள்களை சித்திரப்படம் எப்படி எடுத்துக் காட்டக்கூடியதோ, அப்படி ஒரு கதையா னது வாழ்நாளின் சம்பவங்களை எடுத்துக் காட்டுவதா யிருக்கவேண்டும். ரம்மியமுள்ளனவும், நற்போதனையுள் ளனவுமான கதைகளை அறிவாளியான ஒரு தந்தை சேக ரித்துச் சொல்லத் தயாராய் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். நல்லகதை புஸ்தகங்களினின்று கதைகளைச்

சேகரிக்கலாம். ஆனால் அத்தகை புத்தகங்கள் அரிதா யிருக்கின்றன இதுகூடாவிடில், பரம ஏழையான தந்தை யுங்கூட சுற்றுப்பக்கங்களில் நிகழ்ந்த உண்மையான சம்ப வங்களைச் சொல்லலாம். உதாரணமாய், எப்படி ஒரு சிறுவன் அல்லது சிறுமி போட்டிருந்த ஆபரணத்துக் காக அபகரிக்கப்பட்டு கொல்லப்பட்டனர் என்று கூறு மின். எப்படி சிறுவன் ஒருவன் அசட்டையாய் ஒரு மரத்தின்மேலேறி, கீழேவிழுந்து, தன்காலை முறித்துக் கொண்டான் என்றும்; எப்படி பெண் ஒருத்தி அசட்டை யாய் நெருப்பைக் கையாட, அது அவள் துணிகளைப் பற்றி எரிந்து, அவளை அதிகமாய்ச் சுட்டு காயப்படுத்திற் றென்றும், இப்படி பலவாறு கூறுமின்.

குழந்தைகளுக்கான தண்டனை:—கழி, சிம்பு அல்லது சவுக்கால் குழந்தைகளை யடிப்பது எல்லா தண்டனைகளி னும் மிகத்தீயதும் கொடியதுமானது. அவ்விதந்தான் சகலவித சரீர தண்டனைகளுமாகின்றன. அவ்வித தண்ட னைகளால் எத்தனையோ குழந்தைகள் (எள்ளளவும் நல்ல ஸ்திதிக்கு வருவார்களென்ற) நம்பிக்கைக் கிடமின்றி கெடுக்கப்பட்டார்களென்றதை நான் கண்டுகொண்டிருக் கிறேன். நாகரீகம்பெற்ற தந்தை யென்பானெவனும் பொதுவாயத் தகைய கொடுந்தண்டனைகளனாவசியமென க் கண்டு கொள்வான். முக்கிய கருத்தென்னெனில், குழந்தையைச் சரீர உபத்திரவம் செய்வதைவிட, அதன் மனோ நிலையைப்பற்றி அதை நல்வழிப்படுத்தலே. இனும் கொடையானது எப்படி குழந்தையைச் சந்தோஷிப்பிக்

கிறதற்கென்றுளதோ, அப்படியே தண்டனை என்பது குழந்தைக்கு வருத்தமூட்டுவதற்கென்றுளது. சந்தோஷம் பிறத்தல் எவ்வளவு சுலபமோ அவ்வளவு சுலபமாகவே குழந்தைக்கு மனவருத்தமும் பிறந்துவிடும். தண்டனைகள் பொதுவா யெவ்வாறிருக்கவேண்டுமெனில்; நன்கொடைகளை ஈதலில் சம்மதமில்லாதிருத்தல்; அவைகளைப் பின்னொரு சமயம் கொடுப்பதற்கு நிறுத்திவைத்தல்; அவைகளைக் கொஞ்சகாலம் கொடாமலிருத்தல்; சில சமயங்களில், அவைகளைக் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தல்; மற்றுஞ் சில சந்தர்ப்பங்களில் அவ்வித கொடைகளைப் பறிமுதற் செய்தலென்றிருக்கவேண்டும். முன்னரே விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கும் நன்கொடைகள் எத்தனையோ, அத்தனை தண்டனைகளைத் தந்தை சிந்தித்து அமைக்க சாத்தியமென்றது இதனுலேற்படுகிறது. ஒரு குழந்தை தவறுதலாய் நடக்கிறதானுல், தந்தை அதைப் பார்த்து, "நீ இன்ன இன்னவிதம் ஒழுங்கீனமாய் நடந்தபடியால், நான் உனக்குக் கொடுக்கவேணுமென்று எண்ணியிருந்த இன்ன இன்ன நன்கொடையைக் கொடேன்," என்று, சொல்லலாம். "உன்னை உத்யானவனத்திற்கு எடுத்துச்செல்லமாட்டேன்." "உன்னைக் கண்காக்ஷிசாலைக்கு எடுத்துச் செல்லமாட்டேன்." "உன்னை அந்த கோயில் திருவிழாவுக்கு எடுத்துச் செல்லமாட்டேன்." "மற்ற பிள்ளைகளை நான் வண்டியில் வைத்துக்கொண்டு சவாரிபோவேன்; ஆனுல் நீ மாத்ரம் வீட்டிலிருக்கவேண்டும்." "நான் (குழந்தைகளுக்கு) கொடுக்கப்போகிற மிட்டாய் பக்ஷணத்தில் உனக்குப்பாகம் கிடையாது." "மற்ற

வர்களுக்கு விளையாட்டுச் சாமான்களைக் கொடுப்பேன்; உனக்குமட்டுமில்லை." "உனக்குச் சித்திரப்பட காக்ஷி காண்பியேன்." "என்னிடத்தில் சில பொம்மை புத்தகங்களுள, ஆனால் உனக்கு ஒன்றுகூட தரமாட்டேன்." "உன்னோடு நான் பேசேன்." "உனக்கு சட்டைப் பைப் பணம் கொடேன்." "அதை குறைத்து விடுவேன்." "உன்னிடமிருந்து இன்ன வஸ்துவை நான் திரும்ப எடுத்துக்கொள்வேன்."

இவ்வுதாரணங்கள் சாதாரண புத்தியுள்ள எந்த தந்தைக்கும் அவையின் கருத்தின்னதென எடுத்துக் காட்டும். குழந்தை ஏதாவதொன்றைக்கொண்டு விஷமம் செய்தால், அதனிடமிருந்து அவ்வஸ்துவை எடுத்துவிடுங்கள்; உதாரணமாய், வேலைக்காரனை சவுக்காலடித்தால், சவுக்கை எடுத்து அப்புறப்படுத்துங்கள்; சகோதரன் அல்லது சகோதரியை யது பந்தாலடித்தால், பந்தை அப்புறப் படுத்துங்கள்; யாரை யேனுமது குடையாலடிக்குமானால், குடையை அப்புறப்படுத்துங்கள். ஆலசிய புத்தியால் எதையாவது அது உடைத்தாலும் சரி அல்லது கெட்டுப் போக்கினாலும் சரி தந்தை அவ்வஸ்துவை மறுபடி வாங்கிக்கொடுக்கக்கூடாது; ஆனால் குழந்தையைத் தன் ஆலசியத்தா லேற்பட்ட நஷ்டத்தை யுணரச் செய்யவேண்டும். ஏதாவதொரு குழந்தை மற்றொரு குழந்தையினிடமிருந்து ஏதாவதொரு வஸ்துவைப் பிடுங்குமானால் உடனே அவ்வஸ்துவை முன்னுடி வைத்திருந்த குழந்தையிடம் சேர்ப்பிக்கவேண்டும். மற்றொரு குழந்தையின் யாதாமொரு

பண்டத்தை யாதாவதொரு குழந்தை யுடைத்துவிடு மானல், அல்லது கெட்டுப்போக்குமானல், அதற்காக வக்குழந்தையின் அதேவித பண்டத்தைப் பதிலுக்கு அம்மற்றொரு குழந்தைக்குக் கொடுக்கும்படி செய்ய வேண்டும். ஒரு குழந்தை ஏதாவது விஷமம் செய்தால் கூடுமானவரையில் அதையே தன் விஷமத்தைத் திருத் தும்படி செய்யவேண்டும். உதாரணமாய், கிழிந்த காகிதத் துண்டுகளால் இடத்தை குப்பையாக்கினல், குழந்தையை யே அக்குப்பைகளை சேகரித்து குப்பைத்தொட்டியில் கொண்டுபோய்ப் போடச்செய்மின்; சுவற்றில் கோடு கிழித்தால் அவைகளை குழந்தையைகொண்டே அழிக்கச் செய்மின்; மற்றொரு பிள்ளையின் விளையாட்டு சாமானை யுடைத்துவிடுமானல், தன் சொந்தப் பைப்பணத்திலிருந் து பதிலுக்கு சாமான்வாங்கி ஈடுசெய்யச் சொல்மின். சுருங்கச் சொல்லின், எந்த நியாயங்களைக்கொண்டு மனி தர்கள் பொதுவாய்ப் பழகுகிறர்களோ, அந்த நியாயங் களைக்கொண்டே குழந்தையிடம் பழகுமின். மற்றொரு விதம் சொல்லுமிடத்து, அவர்கள் வயது வளர்ந்து உல கில் சம்பந்திக்குங்கால் எந்த நியாயம் அவர்களுக்குச் சம்பந்தமாமோ அதே நியாயத்தைக் குறுகினவழியில் குழந்தைகளிடத்தில் சம்பந்திக்கச்செய்மின்; அவ்வாறு செய்தால் உலகின தியல்பை யவர்கள் முற்பருவத்திலே கற்றுப்பழக சாத்யமாகிறது. குழந்தை ஏதாவது தவறு தலாய் நடந்தால், அதற்காகத் தானே மனம் வருந்தித் தன் பிசகைத் தானகவே ஒப்புக்கொண்டு, இனி அவ் விதப் பிசகு தான் செய்வதில்லையென்று அது சொல்லு

மாறு அதைப் பழக்குமின். கண்டித்தல், குற்றங்கண்டு கடிந்துமொழிதல், குற்றஞ்சாட்டல், அசம்மதம்காட்டல், நயமாய்ப் புத்திசொல்லி,கண்டித்தல் யாவும் தண்டனையே யாம்; ஸமயோசிதமாயவைகளை யுபயோகிக்கலாம். குழந்தையைக்கண்டிப்பதில், கடூரமான வசனங்களையும் மிகவும் மரியாதைத்தப்பான வார்த்தைகளையும் தவிர்க்கவேண்டும். யாதாமொரு பதப்பிரயோகஞ் செய்யலாம், அல்லது கூடாதென்ற சந்தேக முண்டாகுங்கால், தந்தை தன் மேலோன் தன்னை எவ்விதம் நடத்தவேண்டியதோ அவ் விதமே தானும் குழந்தையை நடத்தவேணுமென்ற நியாயத்தைப் பற்றவேணும்; உதாரணமாய், குழந்தையை "மூட" "கழுதை" என்று பலவாறு வையாதேயுங்கள். கால் தடுமாறி விழுதல்; ஏதாவதொரு வஸ்துவைத் தவறி யுடைத்து விடுதல்; மநமாரவேணுமென்று செய்யாமல் தவருதலாய், யாதொரு நாற்காலியைத் தள்ளிவிழச் செய்தல், மைக்கூடைக் கவிழ்த்தல், பென்ஸிலை யுடைத்தல், ஸ்லேட்டை யுடைத்தல், படத்தைக் கிழித்தல் அல்லது அழுக்காக்கல், என்றவிதம் பலவாறு தவருதலாலோ அல்லது மனமாரவேணுமென்றில்லாமலோ செய்யுங் காரியங்களுக்காகக் குழந்தையைத் தண்டிக்காதேயுங்கள். விளையாட்டா யின்னொரு குழந்தையைத் துரத்திக்கொண்டு ஓடல்; சப்தம் போடல்; உறத்து நகைத்தல்; பக்ஷி, மிருகங்கள்போன்று கூவுதல், என்று பலவாருகப் பிறருக்குத் தீங்கற்றவையில் அக்காரியம் கூடாதென்று கண்டிக்கப்பெற்றபின் செய்வதாயல்லாதிருந்தால் அதைச் செய்தற்குக் குழந்தையைத் தண்டியாதேயுங்கள். தந்தை

சொற் கேளாததற்குக் குழந்தைத் தகுமானவிதந் தண்டிக்கப்பெறலாம். ஆனால், தனக்கு வலியை யுண்டாக்குவதான யாதொரு காரியத்தைக் குழந்தை செய்யுமானால், அச்சமயங்களில் நம் தண்டனையையுங்கூடச் சேர்க்காதீர்கள். உதாரணமாய், ஏதாவதொரு உயர்ந்தவிடத்திலிருந்து குழந்தைத் தடுமாறி விழுவதால் தோல்வயண்டு காயமுண்டாகிறது. அக்காயத்தின் வலியே யதற்கேற்ற பலனாய்ப் போதுமான சிக்ஷையாகிறதால், இனிமேலதை அதிக சாக்கிரதையாயிருக்கச் செய்யும். ஆகையால் அச்சகச தண்டனைக்குத் தமது தண்டனையையுங்கூடச் சேர்த்தலென்றால், அது தந்தையின்பால் அனாவசியமும் அக்கிரமுமான கார்யமேயாகும். மேலே கூறியவண்ணம் தானாபியற்கையிலேற்பட்ட தண்டனைகள் தான் நம்மால் விதிக்கப்பெறுந் தண்டனைகளைவிட அதிக நன்மையைத் தருவனவாமென்றதை ஞாபகத்திலிருத்துமின்.

இனாங் கொடைகளும் தண்டனைகளும்:—பொதுவாய் மனிதரைக் கட்டியாளுமுறைக்கு அவசிவமெனப் பெறுவதுபோன்றே, குழந்தைகளைக் கட்டியாளும் முறைக்கும் நன்கொடைகளுந் தண்டனைகளும் அவசியங்களெனப்பெறும். மனிதர் விஷயத்தில் போன்றுதான் குழந்தைகள் விஷயத்திலும், நற்குண நல்லொழுக்கங்களுக்காக நன்கொடையளித்து உற்சாக மூட்டவேண்டும்; தீக்குணத் தீயொழுக்கங்களுக்காகத் தண்டனையின் மூலம் பின்னொருகால் செய்யவொட்டாது தடுக்கவேண்டும். முதியோர் பாலர் இவ்விருவர் விஷயத்திலும், நன்கொடைகளையும் தண்டனைகளையும் ஏற்படுத்துவதற்கான நியாயங்

கள் கிட்டத்தட்ட ஒரே விதமானவையே. வித்தியாச மெலாங்கூடி, முதியோர் விஷயத்திலேற்பட்டதைவிட, குழந்தைகள் விஷயத்தில் நன்கொடைகளும் தண்டனைகளுஞ் சொற்பமாயுஞ் சாமான்யமாயும் ஏற்பட்டிருப்பனவென்பதுதான். நன்கொடைகள் அளவுகடந்து அதிகமாயாவது, மிகவும் அடிக்கடியாவது இருக்கவொண்ணாது; ஏனெனில், அதனால் அளவுகடந்தும் மிக அடிக்கடியும் நன்கொடைகளை எதிர்பார்க்குஞ் சுபாவம் குழந்தைக்குண்டாகும். அதேவிதந்தண்டனைகளும் அதிகமாயும் அடிக்கடியுமிருக்கக்கூடாது. நன்கொடையானது நல்லொழுக்கத்திற்குத்தக்கவளவிலும், தண்டனையானது தீயொழுக்கத்திற்குத்தக்கவளவிலு மிருக்கவேண்டும். ஒவ்வொன்றும் கருதிய வுத்தேசம் நிறைவேறப் போதுமானதாயிருக்கவேண்டும்; அதாவது, நல்லொழுக்கத்தைக்கண்டு உற்சாகப்படுத்தலும், தீயொழுக்கத்தைக்கண்டு கண்டனம் செயலுமேயாம். சுருங்கவுரைத்திட, ஒவ்வொரு விஷயத்திற்கும் வேண்டியதற்கு மேற்செல்லவேண்டாம். வேறு விதங்கூற, நன்கொடைகளையும் தண்டனைகளையுஞ் செட்டாயுபயோகியுங்கள். மற்றுமோர் விதமுங்கூற, நன்கொடைகளையுந் தண்டனைகளையும் வீண் விருதாவாயுபயோகிப்பதை நிறுத்திவிடவேண்டும். குழந்தைகளுக்கு நன்கொடையளிப்பதில் தந்தை அரசன்போன்று பக்ஷவாதமற்றிருக்கவேண்டும். குழந்தைகளைத் தண்டிப்பதில் தந்தை ஒரு நியாயாதிபதியைப்போன்று தாக்ஷண்யமில்லாமலும் நடுநிலை தவறுமலும் இருக்கவேண்டும். இவ்விதஞ் செய்தலால், இனிஅவர்கள் பிரவர்த்திக்கவேண்டிய உலக

வழிகளுக்குக் குழந்தைகள் சிறுகச்சிறுகப் பழக்கப்பட்டு தயாராவார்கள். நன்கொடையும் தண்டனையும், குழந்தையின் நல்லொழுக்கத்துக்குத் தக்கவளவில் தந்தையாலமைக்கப்பெறவேண்டுமே யல்லது, குழந்தையினிடம் அவருக்குள்ள பிரியம் அல்லது பிரியத்தப்புக்குத் தக்கவாறமைக்கப் பெறக்கூடாது. தாயார் சிபார்சு செய்கிறார் என்பதற்காகத் தந்தையானவர் மிக அதிகமான நன்கொடையுங் கொடுத்தல்கூடாது; அதே காரணத்திற்காகத் தண்டனை விதியாமலும் இருக்கக்கூடாது. குழந்தையானது தன் குற்றத்திற்காகத் தானே வருத்தமுற்று இனிமேல் நல்லொழுக்கமே பெற்றிருக்கத் தீர்மானித்துளதாய் நிச்சயஞ்சொல்லும் விஷயங்களில், தண்டனையானது குறைவாகச் செய்யலாம் அல்லது முற்றுமில்லாமற் செய்யலாம். குழந்தைக்குத் தண்டனை விதிக்குங்காலையில், தந்தையானவர் கோபத்தால் தூண்டப்படாவண்ணம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். மிகவதிகமான நன்கொடைகள் குழந்தையைக் கெடுத்துவிடும்; மிகவதிகமான தண்டனைகள் அதை சண்டித்தனமுள்ளதாக்கும். நன்கொடைபெறும் ஒவ்வொரு சமயத்திலும் குழந்தையானது எந்த நல்லொழுக்கத்திற்காக நன்கொடையளிக்கப் பெற்றதென்றதைத் தெரிந்துகொள்ளட்டும். அப்படியே, தண்டனைபெறும் ஒவ்வொரு சமயத்திலும், குழந்தையானது எந்தத் தீயொழுக்கத்திற்காக தண்டிக்கப் பெற்றதென்றதை யறிந்து கொள்ளட்டும். இவ்விதமாய்க் குழந்தையானது சீக்கிரத்தில் நல்லொழுக்கமெது தீயொழுக்க மெதுவெனவும், ஒவ்வொன்று

லாயபயன் யாதெனவுங் கற்றறியும். அவசரபுத்தியால் நன்கொடை யளிப்பதாய் வாக்களித்து விட்டு அதனை கொடுக்கத்தவறுதீர்கள்; அவசரபுத்தியால் தண்டனைவிதிப்பதாய்ப் பயமுறுத்திவிட்டுஅதனை விதிக்கத்தவறுதீர்கள் நன்கொடைகளும் தண்டனைகளும் (இனத்துக்குத்தக்கபடி நேருகின்றதவறு) நிச்சயங்களென்றும், யுக்தானுசாரமாய் இஷ்டத்துக்கு நிகழும் அனிச்சயங்களல்லவென்றும் குழந்தையை யுணரச்செய்யவேண்டும். நன்கொடைக்காகவென்றல்லாமல்அது நலமென்றதற்காகமாத்திரம்நல்லொழுக்கத்தைப் பற்றுவதிலும், தண்டனைக்காக வென்றல்லாமல் அது தீதென்றதற்காக மாத்திரம் தீயொழுக்கத்தை விடுவதிலும் குழந்தைக்கதிக ஆனந்தம் ஜனிக்கப்பழக்குமின். நன்கொடைகளும் தண்டனைகளும் தாயினுலென்பதைவிடத் தந்தையால் தான் நலமுடன் பகிர்ந்து கொடுபடுகின்றன; ஏனெனில், தாயைவிடத் தந்தையே அதிக புத்தியும், விவேகமும், திடமும் பெற்றவர். [பெரும்பாலும் இக்கொள்கை ஒப்புக்கொள்ளப்படத்தக்கதாயினும், இந்திய சமுகத்தைப்பற்றிப் பேசுமிடத்துங்கூட, பூராவாய் அது ஒப்புக்கொள்ளப்படத்தக்கதில்லை. ஏனெனில், இந்திய குடும்பங்களில் தந்தையைவிட, புத்தியிலும், விவேகத்திலும், மற்றுமுள்ள எல்லா குணங்களிலும் தாயே சிறந்தவரா யிங்குமங்கு மிருப்பதை யாரே யின்னுளிலறியாதவர்? T. A. G. (Tr.)]

## குழந்தைகளுக்கு வெகுமதி.

குழந்தைக்குச் சந்தோஷமூட்டுவ தெதுவாயினும் வெகுமதியாக்கப் பெறலாம். குழந்தைகளுக்குச் சந்

தோஷம் எவ்வளவு சுலபத்திலுண்டாகிறதோ அவ்வள வுக்குத் தக்கவாறு அவர்களின் வெகுமதிகள் அதிகமாக் கப்பெறலாம். தந்தைத் தகுந்தபடி யோசனைசெய்து எத் தனையோவித வெகுமதிகளை யுண்டாக்கலாம்.*

விளக்கவேண்டியதற்குச் சிலவுதாரணங்களை இங்கு காண லாம்:—பழங்களையும், அதேவிதம் இனிப்புள்ள தின்பண்டங்களை யுங் கொடுத்தல் வெகுமதியாகலாம். (இவைகளைக் கொடாதிருத் தலே நலமென வைத்தியர் Doctor-கள் அபிப்பிராயஞ் சொல்கி றார்கள்.) பலவித வீட்டு பக்ஷணங்கள் (ஐரோப்பிய, அல்லது இந் திய) விளையாட்டுக்கருவிகள், படபுத்தகங்கள், ரப்பர்பந்துகள், பூதக்கண்ணாடி, பேனாக்கத்தி, கத்தரிக்கோல், ஊசிகள், கோலிக்

*இந்நூற்றாண்டில் கல்விக்காக பாடுபடுகிறவர்கள் இவ் வெகுமதி கொடுக்கும் வழக்கம் சரியல்லவென்கிறார்கள். அத னால் வெகுமதி கிடைக்குமென்பதற்காகவன்றி, அது நியாயமான தென்பதற்காக மாத்திரம் ஒரு நியாயமான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இளமையிலேயே குழந்தைக்குப் புத்தி பிறக்கச் செய்தல் விரும்பத்தக்க காரியம், செய்யும் ஒவ்வொரு நற்காரி யத்திற்கும் வெகுமதிகளை எதிர்பார்க்குந் தன்மையானது தன் கடமையைச் செய்தலென்ற கருத்தையே வேருடனறுக்கிறது. ஜெர்மெனியைப்போன்ற நாடுகளில், பள்ளிக்கூடத்துப் பிள்ளை களுக்கு வெகுமதி கொடுப்பதில்லை; ஏனெனில், பரீக்ஷைகளில் தேறி மீசுரமாதல் தமக்கே தாம் செய்துகொள்ளவேண்டிய ஒரு கடமை என்பதை யவர்களறிந்துகொள்ளவேண்டிய தவசியமென க் கருதப்படுகிறது. எவ்விதமான வெளித்தூண்டுகோலுமில்லா மல் தன்னால் கூடியவரையில் சோபிக்க ஒவ்வொருவனும் முயல வேண்டும். மனிதர்களும் ஸ்திரீகளும் சுயநலம்பற்றின உத்தே சங்களால் வியவகரிக்கிறதைவிட்டு கடமையின் ஏவுதலாற் றூண் டப்பெற்று காரியங்கட் செய்வார்களேயானால், உலகமுழுதும் எவ் வளவு குதூஹலமடையும்!

குண்டுகள், ஜலக்குழாய், பீச்சாங்குழாய், பம்பரம், திசைக்கருவி, தூரதிருஷ்டிக்கண்ணாடி, வர்ணக்கண்ணாடி, கடற்கிளிஞ்சுகள், பெல்ட், குருவிக்கூடு, கிளியும், கூடும், சிறுமேஜை அல்லது நாற்காலி, சாமான் அலமாரி, ஊதாங்குழாய், குடை, பிரம்பு அல்லது சவுக்கு அல்லது சிம்பு, கற்பலகை, மைகூடு, பேனா பென்விற்கள், ரூல்கழி, கால் அளவு, திராசு, கடுதாசுமேல் வைக்குங்கனம், சிறுநோட்டுபுஸ்தகம், சிறுகைலாந்தர், மணி, பூக்குடலை, பாய், குல்லா, சிறுவேடிக்கைக் காக்ஷிக்கண்ணாடி, மற்ற பிள்ளைகளுடன் விளையாட அநுமதி, பெற்றோருடன் நடத்தல் அல்லது வண்டி சவாரி செய்தல், கண்காக்ஷித்தோட்டம் சென்று அங்குள்ள மிருக இனங்களைப்பார்த்தல், வேடிக்கைக் காக்ஷிக்குப் போகல், கோயிற்றிருவிழாவுக்குப் போகல், தமாஷ் பார்த்தல், தோணிமேற்போகல், சிறு குதிரைக்குட்டி சவாரி செய்தல், தோட்டத்திலிருந்து பூக்கொய்தல், தோட்டத்திலிருந்து கரிகாய்கள், பழங்களை எடுத்துச்செல்லல், கடற்கரை, ஆற்றங்கரை அல்லது குன்றுக்கு அருகிற்போகல், கோயிலுக்குப் போகல், கடைக்குச் செல்லல், ரயிலேறி கொஞ்சதூரம்சென்று திரும்பல் படாசுவெடிகள் சிறுகக்கொடுத்தல், கைகுட்டை, பாப்பாசு, தந்தை, தாய், சகோதர, சகோதரிபடம், செடிகளை நட்டுவளர்க்கச் சிறு இடம் ஒன்று, சிறு சாகுபடிக்கருவிகள், முகம்பார்க்கும் கண்ணாடி, சீப்பு, விளையாட்டுப்பருந்து, நாய்க்குட்டி, கன்றுக்குட்டி அல்லது ஆட்டுக்குட்டி, நிலாச்சாப்பாடு, சாப்பாட்டுக்கு சினேகிதர்களையும் விளையாட்டுத் துணைவர்களையு மழைக்கவிடுதல், எப்பொழுதாவது ஆறு அல்லது குளத்தில் குளிக்கச்செய்தல், கையில் போட்டுக்கொள்ளும் சிறுமோதிரம், பூட்டுசாவியுள்ள சாமான்வைக்கும் சிறுபெட்டி, வர்ணக்கண்ணாடி மணிகள், குழந்தைவண்டி அல்லது புஷ்புஷ் வண்டி, சிறுவாத்தியப்பெட்டி, புது டம்ளர், வீடுகட்டக் கடுதாசு அட்டைகள் அல்லது விளையாடும் கடுதாசுகள், பொம்மைகள் செய்யப் பலவர்ணத்துணிகள், பொம்மைக்கு ஆபரணங்கட்செய்ய

அரக்குகள், தன்னிஷ்டமான உருவங்களைச்செய்யத் தயாரிக்கப் பெற்ற களிமண், விசிறி, பெற்றோரின் நன்கு மதிப்பைக்காட்டும் "ஸபாஷ்" போன்ற பதங்கள். பிரியத்துடன் ஒரு முத்தமிடுவதுங் கூட வெகுமதிகளிலொன்றாகலாம். ஒவ்வொரு மாதமும் ஏதாவது சொற்பத்தொகையைப் பைப்பணமாய்க் கொடுக்கலாம்.

## பைப்பணம்.

இதுபோன்ற சிறுதொகை ஒவ்வொரு மாதமும் கடைசியில் பிள்ளைக்குக் கொடுக்கப்படவேண்டும். அந்த மாதத்தில் காட்டிய நல்லொழுக்கத்திற்காக வெகுமதியா யளிக்கப்பெறவேண்டுமே யல்லது, தனக்கதிலேதோ வொரு பாத்தியதை யிருக்கிறதென் றதற்கல்ல. பருவமானபின் சம்பளம் பெறக்கூடியதை யொக்க பைப்பணமென்பதிருக்கவேண்டும். வேலைக்காரனுக்கு எஜமான் சம்பளம் கொடுப்பதுபோன்றே சரியான காலத்தில் விடாமற் கொடுத்துவரவேண்டும். தன் பருவகாலத்தில் ஒருவரிடம் வேலைக்காரனா யமரும்போது தான் எதிர்பார்க்கக்கூடிய தின்னதென் பதைக் குழந்தை இவ்விதமாய்த் தெரிந்துகொள்ளும். மாதமுடிவுக்குள் அது சம்பளத்தை எதிர்பார்க்கக்கூடாது. தனக்குச் சேரவேண்டிய தருண மின்னதுதானென்று அது கண்டறிந்து கொள்ளவேண்டும். மாதமுடிவு வரையில் பணம் நிற்கும்வண்ணம் அது செய்துகொள்ளும். செம்பு, வெள்ளி நாணயங்களான பைசாக்கள், கால், அரையணுக்கள், 2, 4, 8 அணு நாணயங்கள், ஒரு ரூபாய் என்ற நாணய வித்தியாசங்களையது பழக்கத்தில் தெரிந்துகொள்ளும், நாணயங்களின் பொருமானங்களைத் தெரிந்துகொள்ளும். அந்நாணயங்களை வரவு செலவிடுவதற்கான கணக்குகளைத் தெரிந்துகொள்ளும். தந்தை அதற்கெல்லாஞ் செய்வதற்குப் பதிலாகக் குழந்தையே தனக்குவேண்டிய சாமான்களைக் கடையில் வாங்கிக்கொள்ளும்படி விடவேண்டும். அப்பொழுது தான் பல நாணயங்களின் பொருமானங்கள் தெரியும். சொஞ்சங்கொஞ்சமாய்க் குழந்தைக்கு ஐவேஜியென்று

வின்னதென்றும் தெரியவரும். குழந்தையைப் பணவிஷயத்தில் ஜாக்கிரதையாகி, அதை செட்டாய்ச் செலவிடுதற்கும், அதைக் கொஞ்சம் கொஞ்சமாய் மிகுத்துச்சேகரம் செய்வதற்கும் கற்றுக் கொள்ளும். பணக்காரனாயிருப்பதென்றாலது இன்னதென்றும், ஏழையாயிருப்பதென்றாலது இன்னதென்றும் அது உணர்ந்து கொள்ளும். இவ்விதம் தெரிந்துகொள்ளும் விஷயமெல்லாம் பிற்காலங்களுக்கு அதற்கு மிகப்பிரயோசனமாம். சிறுபிராயத்தில் அவ்வாறு பழக்கப்படாததால், அனேகர் முட்டாள்களாய், உதாரிச்செலவு செய்கிறவர்களாய், ஏழைகளாய், துன்பமுள்ளவர்களாயிருக்கின்றனர். சுருங்கச்சொல்லின், பணத்தைச் சரியானபடி யுபயோகிக்கும் முறையைக் குழந்தைக்குப் புகட்டல் வெகு முக்கியமான விஷயங்களிலொன்று. தவிரவும், காலஹரணமின்றிப் பைப்பணம் கொடுக்கும் தந்தையானவர் ஒருபேருபகாரியாய்க் கருதப்படுகிறார். குழந்தையினிட மவருக்குள்ள செல்வாக்குப் பலமாகிறது. வேறெந்தவிதத்திலும்விட, அவருடைய வார்த்தைக்குக் குழந்தையதிக மதிப்புகொடுக்கும். சகோதரன், சகோதரி அல்லது சினேகனிடமிருந்து குழந்தை கடன் வாங்குமானால், கடன்கொடுத்தவர் தன்கடனைக் கொடுக்கும்படி கேழ்க்கு முன்னே யதைத்தவறாமற் கொடுக்கச்செய்மின். தன் பணத்தைக் காப்பாற்றமுடியாத குழந்தை அதைத்தன் தந்தையிடம் பத்திரமாய்வைக்கச் சிலசமயங் கொடுக்கின்றது. அக்காலையில், குழந்தை பணத்தை இருப்பில் வைக்கிறவனாகவும், தந்தை இருப்பைப் பெற்றுக்கொள்கிறவராகவுமாகிறார்கள். தந்தையானவர் அவரிடம் கொடுக்கும்பொழுதெல்லாம பணத்தைப்பெற்று, வேண்டும் பொழுதெல்லாம் அதைக்கொடுத்து, வரவுகளையும், பற்றுகளையும் மிகுதியையுங்காட்டும் சிறு குறிப்புவைத்து, அதைக் குழந்தைக்கு விளக்கிச் சொன்னால், குழந்தையானது சர்க்கார் சேகர நிதி (Government Savings Bank) யென்பதின்னதென்றும் அதனால் பிந்திய வாழ்நாட்களில் தனக்கு விளையக்கூடிய நன்மை இன்னதென்றும் கண்டுகொள்ள சாத்தியம். குழந்தை தானே

கடைசாமான் வாங்கப் பழகப்பழக, அதற்கு எண்களும், நிறைகளும், அளவுகளும் தெரியவரும். சிறுகச்சிறுகத் தந்தையானவர், பல கடைக்காரர்கள் என்ன என்னவிலைகளுக்குச்சாமான்களைப் பலவாறு விற்கிறார்களென்ற தாரதம்யங்களைக் குழந்தைத் தானாக வேகண்டு, அதிகம்குறைந்த விலைக்குவாங்கவும், உயர்தர மட்டத்தர சரக்குகளின்னவை என்று தாரதம்யப்படுத்திப் பார்க்கவும் அதற்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். காலக்கிரமத்தில், வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் வகையறா வாங்குவதில் தந்தையானவர் குழந்தையைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு போகலாம்.

மனோநுகற்சி குணங்கள் :—இக்குணங்களுள், எவை சமாதானத்துடனும் தனக்கொரு குறைவின்றியும் உலகத்துட னொத்துவாழ்தற் கனுகூலமானவையோ அவைகளைக் குழந்தையினிடம் வளர்ந்திடச் செய்யுங்கள்; மேற்சொன்னவைக்குப் புறம்பானவைகளை மறந்திடச்செய்யுங்கள்.

TABLE.

| முதலாவதின் உதாரணங்கள் | இரண்டாவதின் உதாரணங்கள். |
|---|---|
| பணிவு, அடக்கம். | கர்வம், அகம்பாவம். |
| மரியாதை. | முரட்டுத்தனம், விஷமம். |
| மந நிம்மதி. | அதிருப்தியான குணம். |
| விடாமுயற்சி. | சோம்பறறனம். |
| நியாயம். | ஒருதலைப்பக்ஷம். |
| ஈகை. | கிருபணம். |
| மேலோராணைவழிபடல். | |
| செட்டு. | |
| நன்றிமரவாமை. | எதிர்மறைகள். |
| கபடமின்மை, உண்மை மொழிதல். | |
| ஏமாற்றமின்மை. | |

## மதம்.

பின்கண்ட அழிவிலா தத்துவங்களைக் குழந்தையின் மனதிற்படும்படி செய்யுங்கள்:—கடவுள் உலகைப்படைத்துக் காக்கிறார். அவர் மகிமையுள்ளவர் நல்லவர். எல்லா மனிதரின் க்ஷேமத்தை அவர் கருதுகிறார். ஆகையால் சந்தோஷத்தை விளைவிப்பதே புண்யம், துக்கத்தை விளைவிப்பதே பாபம். நம்மிடம் பிறர் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென விரும்புகிறோமோ அவ்விதம் நாம் பிறரிடம் நடந்துகொள்ளவேண்டும்.

## சுய ராஜ்யம்.

குழந்தைகளைச் சுய ஆளுகைக்குப் பழக்குவது முக்கியம். குழந்தையானது தன்னிலையிற் சுயேச்சையாய்விடப்பெற்றகாலத்தில், அதாவது, தந்தை அல்லது உபாத்தியாயர் இல்லாதசமயத்தில் கிரமமானபடி நன்னடையிலொழுகும்படிப் போதிக்கப்படவேண்டும். அது ஒழுங்காய் நடந்துகொண்டால், சரியானதே. அது ஒழுங்கீனமாய் நடந்துகொண்டால் முன் பிரஸ்தாபித்துள்ள குறிப்புகளின் பிரகாரம் கிரமப்படி கவனமெடுத்துக் கொள்ளுங்கள். பல குழந்தைகள் ஏதாவதொரு பொதுவிளையாட்டிற் சந்துஷ்டிபெற்று கூடியிருக்கும்போது, அவர்களை யடக்கியாள வொருச்சட்டாம்பிள்ளை நியமிக்கப்பெற்று அவன் சொல்லுக்கு அவர்கள் அடங்கி நடக்கும்படி செய்ய வேண்டும். குழந்தைகள் சச்சரவு செய்துகொண்டால், அவர்களுக்குள்ளேயே நியாயம் தீர்த்துகொள்ளும்படியும், அடிக்கடி தந்தையினிடம் புகாருக்கு வராதிருக்கும்படி

யும் அவர்களை யுற்சாகப்படுத்தவேண்டும். அவர்களுக்குள்ள சமாதானக்குறைகளைத் தங்களுக்குள்ளேயே ராஜியாய்த் தீர்த்துக்கொள்வதில் அவர்களை யுற்சாகப்படுத்துங்கள். அனேகர் ஒருவிதம் அபிப்பிராயங்கொடுத்து ஒரு தீர்மானம் ஏற்பட்டால், குழந்தைகளில் தனிப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்கள் அப்பெரும்பாலர் அபிப்பிராயத்தை அலக்ஷியஞ்செய்து மீறி நடக்காதிருக்கக் கற்பியுங்கள்.

## நியாயத் தீர்மானம்.

மரக்கலத்திற்கு சுக்கான் எப்படியோ அப்படியே மனிதனுக்கு மனதிலுதிக்கும் தீர்மானமுமாம். தேகத்திற்கு கண்களெவ்வாறுமோ அவ்வாறேயது (தீர்பானம்) மனதிற்கேற்பட்டிருக்கிறது. சகலவித நற்பழக்கம் நற்போதனைகளின் உத்தேசமெலாம் முக்கியமாய் இதுவேயாதலின், பிற்கால வாழ்க்கையிற்றன்னை அது சுட்டியாளுந் (Self governing) தன்மையுடையதாயாகும் வண்ணம் குழந்தையினிடம் அது (மனதிலுதிக்குந் தீர்மானம்) வளர்ந்து வலுவடையச் செய்யவேண்டும்.

## புலனறிவு சாஸ்திர தத்துவம்

புலனறிவு சாஸ்திரமூலமாய் ஏற்பட்டுள்ள முடிவுகள் நிதர்சனமாய் நிரூபிக்கப்பெறுகின்றனவென்றும்; எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் அவ்வுண்மைகள் மறுக்கப்படத்தக்கனவாயில்லையென்றும், சந்தர்ப்பங்கள் நேரும்பொழுதெல்லாம் குழந்தைக்குச் சொல்லுங்கள். மேற்சொன்னதைக் குழந்தை பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ளாமல் புலனறிவு சாஸ்திரமாவதென்னவென்று கேழ்க்குமானால், வரவர அது கற்றுக்கொள்ளப்

போகின்ற உலக விஷயங்களைப்பற்றின சாஸ்திரமது, என்று கூறுமின். இப்புதிய பிரமாண (ஆதார) த்திற்குக் குழந்தையை வழக்கப்படச்செய்தல் நன்றாகும். எப்பொழுதாவது அப்பிர மாண (அதார) த்தைப்பற்றி நீங்கள் பேசலாம்; உதாரணமாய், அதன்படி, பிசாசு என்றது கிடையாது.ராகுகாலமென்பதுபொய் சகுனமென்பதும்பொய், வைப்பு மந்திரமென்பது மப்படியே.*

விசேஷித்துப் பெருக்கிப்பேசல், ஒன்றை மற்றொன்றாய் வேறுபடுத்திக்கூறல், முதலியன:—குழந்தையினிடம் இவ்வித குணமிருப்பதாகத் தந்தைக்குத் தெரியுமானால், உடனுக்குடன் அதையவர் திருத்தல் நன்று.

---

*[மேற்சொன்னபடி பிசாசு, ராகுகால, சகுன, வைப்பு மந்திர விஷயங்கள் பொய்யென்பது இவ்விருபதாவது நூற்றாண்டிற்றகாது. புலனறிவு சாஸ்திரம் முந்தியைவிட இப்பொழுது விர்த்தியாகிக்கொண்டு வருவதில், மேலே பொய்களென்றவை யெலாம் மெய்களென அச்சாஸ்திரமே சொல்லுங்காலம் கிட்டி யிருக்கிறது. ஸர். ஆலிவர் லாட்ஜ் என்ற புலனறிவு சாஸ்திரத்தின் ஒரு கர்த்தர், புலன்களுக்கெட்டாத சூக்ஷ்ம நிலையுளதென்றும், மரணத்தின்பின் மானிடர் சூக்ஷ்ம சரீரத்துடன் வியவகரிக்கிறார்களென்றும் வெகுவிரிவாய் "ரெய்மண்ட்" என்ற நூலின் மூலம் வெளியிட்டிருக்கிறார். அவர் யாதொரு மதவாதியல்ல, புலனறிவு சாஸ்திரியே. புலனறிவு சாஸ்திரத்திலும் கொள்கைகள் மாறுபட்டுக்கொண்டும், இதுவரையிற் கண்டுகொள்ளப்படாதிருந்த உண்மைகள் அகப்பட்டுக்கொண்டும் வருகிறவிக்காலத்தில், அதைக் கற்கும் விஷயத்தில் மேற்சொன்னவாறு பிசாசு, ராகுகாலம், சகுனம், வைப்பு மந்திரங்களைப் பொய்களென்ற உதாரணங்களைக் கற்பிக்க முன் வருவதற்குப்பதிலாய் வேறுவித முக்கியமான புலனறிவு தத்துவங்களைக் கற்பிக்க முன்வருதலே குழந்தைக்குப் பிரயோஜனமுண்டாக்குமாகையால் அது அறிவைத் தழுவின காரியமாகும். T. A. G. (Tr.)]

## குழந்தை பருவத்திற் செய்யுங்குற்றங்கள்.

குழந்தைக்கு இந்திய பினல் கோட் சட்டவிஷயங்களைக் கற்பிக்கவாரம்பித்தல் தந்தையின்பால் படுமுட்டாள்தனமாகும். என்றாலும், அவ்விஷயங்களை அல்லது அவைகளில் முக்கியமானவைகளைத் தந்தை தன் கருத்தில் வைத்துக்கொண்டு, பெரியவர்கள் எதைச்செய்தால் அது சட்டப்படி குற்றமாமோ அதைக் குறுகினவளவில் குழந்தை செய்யுமானால், அதைத்தான் கவனித்து அதற்காகக் குழந்தையைக் கண்டித்து இனி செய்யவொட்டாமற்றடுக்கவேண்டும். இவ்வழிபற்றலால், குழந்தைக்கு குற்றமுள்ள கார்யங்களின்னவையென்று படிப்படியாய்த் தெரிய வரும். அதனாலுண்டாகும் பயனாய்க் குழந்தைக்கு வயதுவந்த காலத்தில் அது, சட்டப்படி அபராதம், காவல், சவுக்கடி முதலிய தண்டனைகளுக் குள்ளாக்குகின்ற குற்றங்களை செய்யாதொழிக்கும். குழந்தையை கண்டித்து இனி செய்யவொட்டாமற்றடுக்கவேண்டிய குற்றங்களுக்குப்பின் கண்டவை யுதாரணங்களாம். திருட்டு, திருட்டுச்சொத்தை வாங்கல் அல்லது வைத்திருத்தல், மோசம்செய்தல், தீங்கு உண்டாக்குதல், அடித்தல், காயப்படுத்தல், மானக்குறைவாய்ப்பேசல், பொய்க்குற்றம் சாட்டல், பொய்ச்சாக்ஷி சொல்லல், பொய்ச்சமாசாரம் தெரிவித்தல், மற்றொரு குழந்தை நம்பிவைத்த பொருளை மோசடியாய் எடுத்துக்கொள்ளல், குற்றவாளி என்ற ஒருவனைப் பதுக்கிவைத்துக்கொண்டிருத்தல். உலகில் வயதுவந்த பெரியவர்கள் கடுங்குற்றங்களுக்காக எவ்வித தண்டனைகளடைகிறார்களென்றதை எப்பொழுதாவது குழந்தைக்குக் காண்பித்தல் தந்தைபால் தகாத கார்யமன்று.

## உத்திரவுக்குக் கீழ்படிதல்.

தந்தையானவர் குழந்தைகளை கவனிக்கிறதுபோல எல்லா ஜனங்களையும் யாதாமொரு நல்ல ஸர்க்காரானது கவனிக்கிறதென்று எப்பொழுதாயினும் குழந்தைக்குச் சொல்லுங்கள். ஆகை

யால் எப்படி குழந்தைகள் தந்தைக்கு அடங்கி நடக்கவேண்டுமோ அப்படி ஜனங்கள் சர்க்காருக்கு அடங்கி நடக்கவேண்டும்.

## பள்ளிக்கூடம் போகல்.

குழந்தையைப் பள்ளிக்கூடத்திற் கனுப்புவதில் தந்தை அவசரப்படக்கூடாது. அதற்கு எட்டுவயது ஆகும் வரையில் பொறுத்திருக்கவேண்டும். அவ்வயது வரையில், சரியானபடிமட்டும் நடத்திவந்தால், உபாத்தியாயர் உதவியின்றி எவ்வளவோ பாடங்களை விளையாட்டாயும் சந்தோஷமாயும் அது கற்றுக்கொள்ளும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டேனென்று சொல்வதை எத்தனையோ விடங்களில் பார்த்திருக்கிறேன். பள்ளிக்கூடத்துக்குப் போ என்றால் அவர்கள் துக்காக்கிரந்தர்களாகிறார்கள். அவர்கள் அலரி அழுகிறார்கள். அதற்காக அவர்களைப் புடைத்து நிர்ப்பந்தமா யனுப்புகிறார்கள். அதைக் கவனிக்குமிடத்தில், சம்பந்தப்பட்ட பள்ளிகூட உபாத்தியாயர் பிள்ளைகளைச் சந்தோஷமாய்ப் பாடம் கற்கும்படிச் செய்யும் முறையே அறியாதவரெனப் புலப்படும். ஆகையால் தந்தை தேர்ந்த உபாத்தியாயரின்கீழ் செவ்வையாய் நடைபெறும் பள்ளிக்கூடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும். முதலில் குழந்தையைத் தமிழ் பள்ளிக்கூடத்தில் (தெலுங்கு பிள்ளையைத் தெலுங்கு பள்ளிக்கூடத்தில்) வைக்கவேண்டும். அதில் கற்றபின்னர் தான் ஆங்கில பள்ளிக்கூடத்துக் கனுப்பவேண்டும். ஆங்கிலம் கற்கவாரம்பிக்குமுன் அது தன் தாய் பாஷையில் எழுதப் படிக்க, கணக்குபோடக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும்

## குழந்தை கற்கவேண்டிய பாஷைகள்.

முதன்முதல் குழந்தைத் தன்தாய் பாஷையைக் கற்க வேண்டும். ஏனெனில், அது தான் மிகச்சுலபமானதும் பிரயோசனமுள்ளதுமாயிருக்கிறது. ஒரே காலத்தில் ஒன்றுக்குமேற்பட்ட பாஷைகளைக் கற்கும்படிசெய்து குழந்தைக்குச் சந்தேகமுண்டாக்காதே. தன் தாய் பாஷையைக்கற்றபின்னர் தன்னைச் சுற்றிலுமுள்ள ஜனங்களின் பாஷையை அது கற்கலாம். வீட்டில் அது சம்பந்தப்படுகிற எல்லா வஸ்துக்களின் பெயர்களையும் அது கற்கட்டும். அதன்பின்னர் தெருக்குள்ளே அது சம்பந்திக்கும் வஸ்துக்களின் பெயர்களைக் கற்கட்டும். அடுத்தபடி, தான் சாதாரணமாய்ச் சந்திக்கும் நாற்கால் பிராணிகளின் பெயர்களைக் கற்கட்டும். கருத்து யாதெனில், குறுகினவளவில் நன்றாய்க்கற்றுப் படிப்படியா யவ்வளவை அதிகப்படுத்தவேண்டுமென்பதே. சாமான்ய விஷயங்களில் முதலில் ஆரம்பித்துப் படிப்படியாய் நிரடான விஷயங்களுக்குச் செல்மின்; உதாரணமாய், குழந்தை முதலில் குதிரையினிடத்திலும் கொஞ்சகாலம் கழிந்தபின்னர் சேணம், கடிவாளத்தினிடத்தும் பழக்கமாகவேண்டும். குழந்தைகளுக்குச் சில தந்தைகள் வஸ்துக்களின் பெயர்களை ஆங்கில பாஷையிலுச்சரிக்கச் சொல்லி கொடுக்கிறார்கள். இது பிசகு; ஏனெனில், மேலேகண்டபடி ஏககாலத்தில் ஒன்று அல்லது இரண்டு பாஷைகளில் மாத்திரம் கவனம் செலுத்தவிடவேண்டியதென்ற கொள்கைக்கு விரோதமாகிறது. அவ்வளவு இளம்பருவத்தில் ஸம்ஸ்கிருத பதங்களைச் சொல்லிகொடுத்தல் முட்டாள்தனமென்பது

சொல்லாமல் விளங்கும். குதிரையைப்பற்றி பல பாஷை களில் குழந்தை பெயர் சொல்லக் கூடுமானதால், அது ஒரு பாஷையில் மாத்திரம் பெயர் சொல்லக் கூடும்பொழு திருப்பதைவிட அதிகமாய்க் குதிரையைப்பற்றி தெரிந் துகொண்டதா யாகுமென்று ஏற்படவில்லை.

பாராமலோப்பித்தல்.

குழந்தையை யதிகமாய்ப் பாராமலொப்பிக்க வற் புறுத்தாதே; ஏனெனில் யுக்தி புத்திகளை மக்னப்படுத்து வதற் கிதுவொரு வழியாகிறது. திண்ணைப் பள்ளிக்கூடங் களில் நிட்ருசெய்யச் சொல்லிகொடுத்தலே யதிகம். பிர யோஜனமற்றவா றளவுக்கதிகமா யனுஷ்டித்தாலொழிய வப்பழக்கத்தைக் கண்டிக்கத் தேவையில்லை. தயாராய் வாய்ப்பாடத்தி லறிந்துகொள்ள வாழ்க்கைக்குப் பிரயோ ஜனமானதெதையும் குழந்தை நிட்ரு செய்தல் நலம். அக் காரணம்பற்றி, குழந்தைகளைத் தவறின்றியும் சீக்கிரமாயும் கணக்குகள்போடுக் திறமைபெற்றிருக்கச்செய்யும் இந்திய மனப்பாட போதனையை நான் அங்கீகரித்துளேன். ஆங் கில முறைப்படி சொல்லிகொடுக்கப் பெற்றவர்களைவிட நாட்டின் முறைப்படி சொல்லிகொடுக்கப்பெற்ற குழந்தை கள் தான் அதிகத்திறனுடன் அவ்வழிகளில் கணக்குப் போடுகிறார்கள். இன்னும் அனேக விஷயங்களை, வாழ்க் கையிலநுபவரீதியாய்ப் பிரயோஜனமாதலின், மனப்பா டம்செய்தல் நன்று. உதாரணமாய்:—

| | |
|---|---|
| வாரதினங்களின் | பெயர்கள். |
| மாதங்களின் | ,, |
| வருஷங்களின் | ,, |
| ராசிச்சக்கிரத்து ராசிகளின் | ,, |

குழந்தை பள்ளிக்கூடத்திற் கனுப்பப்படுங் காலையில் தந்தை கவலையாய்ப் பார்க்கவேண்டிய தென்னவெனில்:—

முதலாவது.—தன் குழந்தைத் தீர்க்காயுளும் திடகாத்திரமும் பெற்றிருக்கவேண்டுமென்பதிற் கவலை வைக்கவேண்டும்.

இரண்டாவது:—அவர் கவலைப்படவேண்டிய அடுத்த விஷயம் தன் மகனுக்கு ஜீவனோபாயந் தேடிவைக்க வேண்டுமென்பதே. முதலாவது விஷயத்தில் அலக்ஷியமாயிருக்கும் தந்தையானவர் தன்னையும் தன் மகனையும் துன்பத்திற்குள்ளாகும்படி செய்துகொள்ளுகிறார். இரண்டாவது விஷயத்தில் அலக்ஷியமாயிருந்து தன் மகனைப் பட்டினியால் வருந்தச்செய்யும் தந்தையானவர் கொடும் பாவியாகிறார். இந்திய தந்தை முதலாவது விஷயத்தில் பின்கண்டவைபோன்ற வழிகளில் அடிக்கடி தவறிவிடுகிறார்:—வளரும் வயதில் சரியான வேளைகளில் ஆகாரம் கொடாமலும் சத்துள்ள ஆகாரம் கொடாமலுமிருப்பது. பக்குவகாலத்திற்கு முன்னமே ஸ்திரீ ஸம்யோகத்திற் கிடங்கொடுப்பது. பள்ளிக்கூடத்துப் பரீக்ஷைகளில் தீவிரமாய்த் தேறவேணுமென்று மகனை வற்புறுத்தி மூளைக்கு மிதமீறி வேலைகொடுப்பது. இந்திய தந்தை இரண்டாவது விஷயத்தில் பின்கண்டவைபோன்ற வழிகளில் அடிக்கடி தவறிவிடுகிறார்:—அவர் தன் சொத்தை யோசனையின்றி செலவழித்து, அல்லது கடன்பட்டுவிட்டுத் தன் மகனுக்கு ஒன்றும் மிகுராமற் செய்கிறார். தன் மகனுக்கு ஏதாவதொரு பிழைப்புக்குவழியா யாதொருவேலையுங் கற்றுக்

வதைவிடத் தனக்குச் சுலபமாய்த்தெரியும். தன்னுடைய சொந்தவேலையை யவனுக்குக் கற்றுக்கொடுத்தல் நல மென்பது அவர் கருத்திற் கெட்டுவதில்லை. தன் சொந்த வேலைக்கும் பிரயோஜனமில்லாமலும் வேறொரு வேலைக்கு முதவாமலுமிருக்கும் விதமாய்த் தன் மகனையவர் நிர்ப் பந்தித்துப் படிக்கவைக்கிறார். யாதொரு தனிப்பட்ட அல்லது வேலைக்குதவும்படியான படிப்புமின்றிப் பொது வான படிப்பிலேயே யதிககாலம் தன் மகனுக்குக் கழியும் படி செய்கிறார். மகனுக்கு எத்தனையோ விஷயங்களில் பிரக்ஞையுண்டு; ஆனால், ஒன்றும், பிழைப்புக்கதனாலொரு வழியுண்டாம் விதம், சரியாய்த்தெரியாது. கிடைக்கக் கூடாததும், அடையமுடியாததும் அல்லது அவன் அதற் கு லாயக்கில்லாததுமான ஒரு பெரும் உத்தியோகத்தை ப்பெறுவதில் தன் மகனுக்கு ஆசை பிறக்கவேணுமென்று எண்ணுகிறார். அல்லது, முதலில் தான் எண்ணியிருந்த தைவிட அதிகப்பணச்செலவு பிடிக்கிறதை யுத்தேசித்து த்திடுமென மகனின் படிப்பை நிறுத்துகிறார். அல்லது செத்தபாஷைகள், அன்னிய பாஷைக்கவி, கலைகள், தத் வங்கள், வானசாஸ்திரம், பூமி தத்துவசாஸ்திரம், பூர் சரிதம், உயர்ந்தகணிதம், உபந்நியாச சம்பாஷணையி முறை, ராஜீயதனம், ராஜீயவிஷயங்களென்றவாறுப் பிழை ப்புக்கு வழியற்ற படிப்புகளைப் படிப்பதில் தன் கால தைப் பிரயோசனமில்லாமல் வீணாய்க் கழிக்கும்படித் த மகனை விடுகிறார். இந்தியாவுக்கு, பிழைக்க வழிதெரியா படித்த மனிதர்களைவிட பிழைப்புக்குச் சம்பாதிக்க கூடிய சாமான்ய மனிதர்கள்தான் அதிகமாய் வேண்டி தாயிருக்கிறது. அவனுக்கு உண்பவர்களைவிட உணவ

யுண்டுபண்ணுகிறவர்கள் தானதிகத் தேவை அவனுக்கு மனப் பழக்கமுள்ள மனிதரைவிட தேகப் பிரயாசை படும் மனிதர்கள் தானதிகத் தேவை.

விவாகம்:—பையனுக்குப் பதினாறு (உத்தமம், இருபது அல்லது இருபத்திரண்டு) ஆண்டுவரும் வரையில் பையனுடைய கல்யாணத்தை ஸர்வவிதத்திலும் நிறுத்தி வையுங்கள். பெண்ணின் கல்யாணத்தை யவளுக்குப் பத்துவயது *முடியும்வரையில் ஸர்வவிதத்திலும் நிறுத்தி வையுங்கள்

பால்ய விவாகத்தினால் பெற்றோர்க்கும் குழந்தைகளுக்கும் மிகத் தீங்குண்டாகிறதால் அவ்விவாகங்கள் பாபகரமானவையென்றும் குற்றமானவையென்றும் சொல்வதற்கு நான் பின்வாங்கமாட்டேன். தம்முடைய பெண்களைக் கிழவர்களுக்குப் பணப்பேய்ப்பிடித்து கல்யாணம் செய்துகொடுக்கும் தாய் தந்தைகள் கடவுளாலும் மனித

---

*பெண்ணுக்குப் பதினாறு அல்லது பதினே[illegible]பது வரும் ரையிலும் பொறுத்திருத்தலேநன்று. அப்பொழுதுதான் அவ நடைய சரீரகூறுபாடுகள் பிள்ளையைப் பெறுவதற்குத்தகு ள்ளதாகும். அப்பொழுதுதான் பிரவிடைப்பருவகால வள ற் ழைத்தோங்கி வளரவேண்டிய புத்தி சாதுர்யத்திற்கும் விநோத ாவங்கட்குமிடமுண்டாம். அப்பருவகாலந்தான், புத்திசாதுர்ய களும், மநோநுகற்சிகளும், சரீரகாத்திரமும் விருத்தியாவதற் கற்ற (நற்) காலம். அக்காலத்தில் (16 அல்லது 17 வயது வரை ல்) தகுங்காலம்வருமுன் குடும்பவேலைத் தொந்திரவுக்குச் சதா ட்படுத்தப் பெறுவதற்குப் பதிலாக, (பெண்களின்) சரீரமானது த்தி சாதுர்யம், மநோ நுகற்சி, சரீர காத்திரத்திற்கடுத்த) ப்பியாசங்களுக்கென்றுத் தனிமையாக்கப் பெறவேண்டும்.

ஞலும் கடுமையாய்த் தண்டிக்கப்படுவதற்குத் தகுதியான வர்கள். விவாக ஸம்பந்தங்கட் செய்வதில், வெரும் ஜாதகப் பொருத்தங்களை மாத்திரம் பார்க்கிறதென்றதை விட்டு யுக்தா யுக்தங்களை (முக்கியமாய்க்) கவனித்துச்செய்மின்.

ஓம்! தத், ஸத்!!

முற்றிற்று.

# பெற்ஞோர் உபாத்தியாயர்கள் சங்கம்.

## 1915ஆம் டிஸம்பர்மீ 28உ ஸ்தாபனம்.

### கருத்துக்கள்.

1. வீடுகளிலும் பள்ளிகூடங்களிலுஞ் சரீரதண்டனை யிடுவதைக்கட்டுடன்விலக்கல்.

2. குழந்தைகளைப் பழக்கும் விஷயத்திற்குச் சம்பந்தமான கல்வி கற்பிக்கும் முறையிற் சமீப நாள்பெற்ற கருத்துகளைப் பெற்ஞோர்களும் உபாத்தியாயர்களுந் தெரிந்துகொள்ளும்படிப் பரவச்செய்தல்.

### உத்தியோகஸ்தர்கள்.

அக்கிராசனுதிபதி.—திவான் பகதூர் டி. சதாசிவய்யர், ஹைகோர்ட் ஜட்ஜ், மதுராஸ். உப அக்கிரசனுதிபதிகள்.—சி. ஜீன ராஜ தாஸர், எம். ஏ., (கான்டெப்) அடையார், மதுராஸ். ஜி. எஸ். அருண்டேல், எம். ஏ., எல். எல். பி., பி. ஆர். எச். எஸ். சிறிதுகாலம் காசி மத்ய ஹிந்து கலாசாலைத் தலைவர். மிஸ். கே. ப்ரௌனிங், எம். ஏ., காசிப் பெண்கலாசாலைத் தலைவி. எப். எல். உட்வார்டு, எம். ஏ. (கான்டெப்), ஸிலோன், கல்வி, மஹிந்தா கலாசாலைத் தலைவர். டி. ஆர். பாண்டியா, எம். ஏ., பி. எச். டி., (கொலம்பியா) பரோடா ராஜ்யம், படான், ஆண் வித்யார்த்தி கலாசாலைத் தலைவர்; இன்னும் மற்றவர்கள். காரியதரிசி.—ஆர். கே. குல்கர்னி, எம். ஏ., எல். எல். பி.,

குவாஸியர், விக்டோரியா கலாசாலைச் சரித்திரப்புலவர், உபகாரியதரிசி.—எஸ். வி. காண்டேகர், அடையார். மதுராஸ்.

இச்சங்கத்தில் பெற்றோர். உபாத்தியாயர்கள் மாத்திரம் சேரவேண்டுமென்பதில்லை; மற்ற யாவரும் சேரலாம். யாரிதிற் சேருவதாயினும், அவர் இச்சங்கத்துக் கருத்துகளை யொத்துகொள்வதோடு மட்டுமில்லாமல், வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நேரில் தான் குழந்தைகளின்மேற் சரீர தண்டனை விதிக்காமலுமிருப்பாரென்று கொள்ளப்பெறும்.

இதில் சேருவதற்குக் கட்டணங்களாவது சந்தாக்களாவதில்லை. ஆனால், இச்சங்கத்தின் கருத்துகளைப் பரவச் செய்வதற்கான துண்டு காகிதங்கள், துண்டு பத்திரிகைகள் வெளிபாகவேண்டியிருக்கும் செலவுகளுக்காக நன்கொடைகளைச் சந்தோஷத்துடன் சங்கத்தின் காரியதரிசி பெற்றுக்கொள்வார்.